அப்போஸ்தலர் நடபடிகள்

தியானக் குறிப்புகள்

ராஜம்மாள் டிக்கிகஸ்

THANKS TO OUR ALMIGHTY GOD. MAY GOD BLESS YOU AND MAY HOLY SPIRIT LEAD YOU

To the Readers

Dear Beloved Brother/Sister, Thank you for downloading this Ebook. Please note that this Ebook is copyrighted by the author of the book or the publisher of the book or as mentioned in the book. Word of God Ministries is just providing you this ebook as free of cost and it is for your personal use not for commercial purposes.

To the Copyright Owners

Dear Copyright owners, Word of God Ministries is doing this Free Ebook service to help the people who are not able to find the printed copy of your book from various countries arround the world and to the people who are restricted to have the printed materials in their house. And this will help the readers to improve their spiritual life.

If you want your new books to be published here as Free Ebook, kindly EMAIL US at wordofgod@wordofgod.in or CALL US at +91 7676505599, +91 9964747708, +91 9964422489

If you feel that your book should not be published, we are KINDLY REQUESTING YOU TO EMAIL US at wordofgod@wordofgod.in or CALL US at +91 7676505599, +91 9964747708, +91 9964422489. We will remove it from our Free Service as early as possible.

About Word of God Ministries

Word of God Ministries was founded in the year 2007, July 29th with the grace and leading of Almighty God by Bro. Yesudas Solomon as an interdenominational ministry. The popular ministry "**Word of God Team**" is one among our various ministries. Now this ministry has 10 branches such as **1)** Word of God Team, **2)** Mobile Ministry, **3)** Internet Ministry, **4)** Deaf Ministry, **5)** Blind Ministry, **6)** Tribal Ministry, **7)** Computer Ministry, **8)** Audio Ministry, **9)** Video Ministry and **10)** Printing Ministry. We all thank our God with full of our heart for using us in His Great Ministry. We need your continuous prayer support. Our vision is to "Reach the Unreached through Technology". Our websites are: www.WordOfGod.in, www.ChristiansMobile.com, www.FreeChristianEbooks.in, www.IndianBibles.net, www.ChristianAudioBooks.in, www.WordOfGodTeam.com, www.WordOfGodMinistry.in, www.KannadaBible.net, www.KannadaChristian.net, www.PrayForKarnataka.com

அப்போஸ்தலர் நடபடிகள்

தியானக் குறிப்புக்கள்

ராஜம்மாள் டிக்கிகஸ்

கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்

Published by
THE CHRISTIAN LITERATURE SOCIETY
POST BOX 501, PARK TOWN, MADRAS 600 003

APPŌSTHALAR NAḌAPAḌIGAḶ
(Dhyānak Kurippugaḷ)

by RAJAMMAL TYCHICUS

in Tamil

© *BEST FOR CHRIST*

First Published in March 1993
The 85th birth anniversary of the author

விலை ரூ. 25·00

Printed at The C.L.S. Press, Madras–7 B3727

அறிமுகம்

என் அருமைத் தாயார் நற்செய்திச் செல்வர் திருமதி ராஜம்மாள் டிக்கிகஸ் அவர்கள் 1950இலிருந்து ஏறத்தாழ 20 ஆண்டு காலம் வேலூரிலுள்ள ஆற்காடு இறையியல் கல்லூரியில் என் தகப்பனார் அருள்திரு. எபநேசர் டிக்கிகஸ் அவர்களோடு சேர்ந்து பணியாற்றியபோது அப்போஸ்தலர் நடபடிகள் நூலை ஒட்டிய பாடங்களை இறையியல் மாணவர்களுக்குப் பயிற்றுவித்தார்கள். 1988இல் அவர் காலமாகிவிட்ட பின்பு கண்டெடுக்கப்பட்ட பாடக் குறிப்புக்களைக் கொண்டதாக இந்நூல் வெளிவருகிறது.

எண்பதாம் ஆண்டில் அடி எடுத்து வைக்க ஒருவார காலமே இருந்தபோது என் அன்னையார் 1988ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 11ஆம் நாள் ஆண்டவருக்குள் நித்திரை அடைந்தார்கள். அவர்களின் 85ஆவது ஆண்டு நிறைவுறும் கட்டத்தில் அவர்களின் நினைவாக இந்நூல் வெளிவருகின்றது.

ஏற்கெனவே இரண்டு பதிப்புக்களைக் கண்டுள்ள அவர்களின் சிறுவர்களே உங்களுக்கு என்னும் எடுத்துக்காட்டுக் கதைகளின் தொகுப்பு நூல் வாசகர்களிடையே மிகுந்த வரவேற்பினைப் பெற்றுள்ளது. அவ்வாறே பலஸ்தீனா என்னும் புனித நாடு என்ற நூலைப் பலரும் விரும்பிப் படிக்கிறார்கள். இந்நூலுக்கும் அத்தகு வரவேற்பு இருக்கும் என்று நம்புகிறேன்.

அன்பன்

சென்னை
11–2–1993

தி. தயானந்தன் பிரான்சிஸ்
பொதுச் செயலாளர்
கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்

அப்போஸ்தலரின் நடபடிகள்

I இந்நூலின் சிறப்பு

1. இதுவே திருச்சபை நூல்களின் ஆதிகிரந்தம். கிறிஸ்தவ சபையின் முதல் 25 வருடச் சம்பவங்கள் இந் நூலில்தான் கூறப்பட்டிருக்கின்றன. யூத மார்க்கத்தில் ஆரம்பித்த கிறிஸ்து மார்க்கம் உலக மார்க்கமாகப் பிரசங்கிக் கப்பட்ட விவரத்தை இங்குக் காண்கிறோம். கோழைகளான சீஷர் தைரியசாலிகளாகி எருசலேமிலும், யூதேயா, சமாரியா, ரோமராஜ்ய முழுவதிலும் சாட்சி பகர்ந்த சரித் திரத்தை இந்நூலே கூறுகிறது.

2. இவ்வாகமப் புஸ்தகம் சுவிசேஷங்களையும் நிருபங்களை யும் இணைக்கின்றது. புதிய ஏற்பாட்டு நிருபங்கள் எழுதப் பட்ட சந்தர்ப்பத்தையும், அவைகளின் பொருளையும் அறிய வேண்டுமாயின் இந்நூலை ஆராய்வது அவசியம். பவுலின் நிருபங்களில் சொல்லப்படுகிற அநேக சம்பவங்களைத் தெவுளி படுத்துவது இந்நூலே.

3. இந்நூல் யூதேயாவின் யூத மார்க்கத்தைக் குறைந்த நிலைக்குட்படுத்தி, கிறிஸ்து மார்க்கத்தைத் தீவிரமாகப் பரவச் செய்த வரலாற்றை விஸ்தரிக்கிறது.

4. அப்போஸ்தலருடைய உபதேசங்களையும் விசுவாச அறிக்கைகளையும் விளக்குகிறது, இந்நூல்.

5. இதில் காணும் அனுபவம் எக்காலத்துக் கிறிஸ்தவர் களுக்கும் முன்மாதிரியான அனுபவம். 'காத்திருந்தால் புது பலன் அடையலாம்' என்பதை இந்நூல் தெளிவாக்குகிறது.

6. இது பரிசுத்தாவியின் சுவிசேஷம். இயேசுவானவர் உயிரோடிருக்கும்போது நடத்திய ஊழியத்தைத் தாம்

மரித்து, உயிரோடெழுந்து பரத்துக்கெடுத்துக்கொள்ளப் பட்ட பின்பு, பரிசுத்த ஆவியின் மூலமாய்ச் சீஷருக்குள்ளே கிரியை செய்து வந்தார். இந்நூலில் துவக்க முதல் முடிவு வரை பரிசுத்த ஆவியின் கிரியைகளைக் காணலாம்.

7. எக்காலத்து மிஷனெரிமாருக்கும் இது சட்ட புத்தகம். எத்தேசத்தாருக்கும் பொருந்தும் சுவிசேஷ ஊழிய இலக்கும் பாடமும் இதில் உண்டு.

8. பொருளில் மட்டுமல்ல, வசனநடையிலும் இந்நூல் சிறந்ததேயாகும். இது கிரேக்க சரித்திரக்காரர் எழுதிய உன்னத நடையில் எழுதப்பட்டுள்ளதை யாவரும் ஒப்புக் கொள்வர். இதே ஆக்கியோனது முதல் பிரபந்தத்தை 'உலகில் சிறந்த புஸ்தகம்' என ரேனன் (Ranan) என்பவர் கூறினர். அதே ஆக்கியோனது இந்த புஸ்தகத்தையும் அவ் வாறே கூற நியாயமுண்டு.

II ஆக்கியோன் லூக்கா

இவர் ஒரு புறஜாதியான். பிசிதியா அந்தியோகியா வாசி. மக்கதோனிய பிரபுக்கள் குலத்தார், ரோம சிலாக்கிய முடையோர், கிரேக்காபிமானி, எழுத்துத்திறன், புத்தி சாதுரியம், கடற்பிரீதியுடையோர், ஒரு வைத்தியர், கிரேக்க நூல்களில் அறிவுடையோர், சுவிசேஷ பிரீதியுடையோர், அப்போஸ்தலனாகிய பவுலுக்குத் தொண்டு ஆற்றியவர். ஒரு வேளை பிசிதியா அந்தியோகியா சபை இவர் பார்வையிலிருந் திருக்கலாம். பவுலின் நண்பர்.

காலம்

அநேகமாய் கி. பி. 63இல் எழுதப்பட்டிருக்கவேண்டு மென உத்தேசிக்கிறார்கள். அவர் ரோமாபுரியிலிருந்து விடுதலையாகி வருமுன் எழுதி இருக்கவேண்டும். ஏனெனில் எருசலேமின் அழிவைப்பற்றி அவர் குறிப்பிடவில்லை. அச் சம்பவம் கி. பி. 70இல் நேர்ந்தது.

நோக்கம்

1. முதலும் முக்கியமுமான நோக்கம்

உயிர்த்தெழுந்த ஆண்டவர் பரிசுத்தாவியானவராலே சீஷர்கள் மூலமாய் எவ்வாறு கிரியை செய்தார் என்பதைப் பகருவதே மேலான முக்கிய நோக்கம். இதை 1:8இல் குறிப்பாகக் காணலாம்.

கிறிஸ்து மார்க்கம் சர்வ ஜன மார்க்கம்

அது யூத மார்க்கத்தில் ஆரம்பித்தாலும், யூத மார்க்கத் தின் பிரிவல்ல. எங்கும் பரவிய மார்க்கம்.

3. கிறிஸ்தவச் சபை பற்பல இடங்களில் ஸ்தாபகமான விஷயத்தையும், விசுவாசத்தின்மூலம் ஏற்பட்ட சபைகளின் வளர்ச்சியையும் தொடர்ந்தேர்ச்சியாய் காட்டுகிறார். அவை எருசலேமிலிருந்து—ரோமாபுரி மட்டும் பரம்பின வகையைத் தெளிவாயும் ஒழுங்காயும் எழுதுகிறார்.

4. சுவிசேஷகருடைய சரித்திரங்களையும் சுவிசேஷ பிரபல்ய ஊழியத்தோடேயே விவரமாய்க் கூறுகிறார். (எ. கா.) பேதுரு, யோவான், ஸ்தேவான், பிலிப்பு, பவுல், தீமோத்தேயு, சீலா முதலியோர்.

முகவுரையும் ஆகமத்தின் பாகங்களும்

1. திருச்சபை எருசலேமில் தோன்றுகிறது (அதி. 1–7). யூதருக்கிடையே சாட்சியும் ஊழியமும்.

2. திருச்சபை பலஸ்தீனாவில் கிளைவிடுகிறது (அதி. 8–12). சில திருப்பங்களும் வளர்ச்சியும்.

3. திருச்சபை உலகின் பல நாடுகளில் பரவுகிறது (அதி. 13–28). திறவுகோல் வசனம் 1:8.

முன்னுரை (1:1–4) மூலம் வெளிப்படும் இருமடிப்புடைய நோக்கம்

1. உயிர்த்தெழுதலின் உண்மையை ஊர்ஜிதப்படுத்து தல். கிறிஸ்து மார்க்கம் நிற்பது இந்த அடிப்படையிலேயே. உயிர்த்தெழுதல் இல்லை என்றால் கிறிஸ்து மார்க்கம் இல்லை.

2. பரலோக ராஜ்ஜியத்தைக் குறித்துச் சீடர்களுக்குப் போதித்தல்.

தற்சோதனை

1. இன்றைக்கு ஆண்டவர் தம்மை உயிருள்ளவராக எவ் விதம் காண்பிக்கிறார்?

2. 'காத்திரு'—இதன் மூலம் ஆத்திர வேலை அல்ல, தக்க ஆயத்தமுடைய வேலையே நமக்கு வேண்டும் என்று அறி கிறோம்.

3. ஜெபத்தோடே காத்திரு—வாக்கு பண்ணப்பட்ட பெலன்.

முடிவு வசனம்: ஏசாயா 40:41.

III பரிசுத்தாவியானவரின் நடபடிகள்

உயிர்த்தெழுந்த ஆண்டவர் பரிசுத்த ஆவியானவராலே சீஷர்கள் மூலமாய்க் கிரியை செய்தார் (அப். 1:8). இருவரது ஊழியத்தைப் பேதுரு, பவுல் பணிகளில் கவனிப்போம்.

பேதுரு

இயேசுவோடிருந்தவர் (3½ வருட காலம்), வயதில் மற் றோரைக் காட்டிலும் மூப்புற்றவர். மீன் பிடிப்பவர். பதற்ற குணமுடையோர்.

1. கடல் மேல் நடந்த சம்பவம்—'அற்ப விசுவாசியே' என்றார் ஆண்டவர்—மத். 14:26-31.

2. நேரிடக்கூடாதே—'பின்னாலே போ சாத்தானே' —என்றார் ஆண்டவர் மத். 16:21–23.

3. 'மூன்று கூடாரங்கள் அமைக்கலாமா?' மறுரூபமலை— மத். 17.

4. 'சகோதரனுக்கு ஏழுதடவை மட்டுமா மன்னிப்பது?' —மத். 18:21.

5. 'பின்பற்றினதின் லாபம் என்ன?'—மத். 19:27.

6. மேலறையில் பாதம் கழுவிய சம்பவம் (யோ. 13).

7. 'நான் ஒருக்காலும் இடறலடையமாட்டேன்'— மத். 26:32.

8. நெருப்பின் அருகே சிறு பெண் முன் மறுதலிப்பு— லூ. 22:37. ஆனாலும் 'உன்னிடத்தில் ஒன்றும் இல்லை அறிவேனே உள்ளபடி வாவேன்' என்று அழைக்கும் ஆண்ட வர் அவரைத் தெரிந்துகொண்டார். மற்ற சீஷர் அவர் பதற்ற குணங்களுக்காகப் பலவாறு அவரை மதிப்பிட்டிருக்கலாம். ஆண்டவரோ தம் நோக்கத்தை இருமுறை வெளியிட்டார்.

1. கல்லின் மேல் சபை—மத். 16:16–19

2. சகோதரரை ஸ்திரப்படுத்து—லூ. 22:31–32.

பேதுரு காத்திருந்து பரிசுத்தாவியை முழுவதுமாய்ப் பெற்றார். பெலனடைந்து சாட்சி கூறினார்.

அவரே முதல் சுவிசேஷ பிரசங்கி.

அவரே முதல் போதகர்.

பரிசுத்தாவி தமக்குள் கிரியை செய்ததால் பெரிய அதிசயங்களைச் செய்தார்.

1, ஒரே பிரசங்கத்தில் மூவாயிரம்பேர் ஏற்றுக்கொள்ளப் பட்டார்கள்.

2. பிறவிச் சப்பாணியை வலது கையால் தூக்கிவிட நடந்து ஆலயத்துக்குள் சென்றான்.

3. மறைவான காரியங்கள் வெளிப்படுத்தப்பட்டன. (உ-ம்) அனனியா, சபீரான், மாயவித்தைக்காரனாகிய சீமோன்.

4. கைகளை வைத்தவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றார்கள்.

5. வியாதியஸ்தர்களைக் குணப்படுத்தினர்.

6. மரித்துப்போன தொர்க்காளை உயிரோடெழுப்பினர்.

7. உள்நாட்டு மிஷனெரியாக ஊழியம் செய்தார்.

பவுல்

கிரேக்கக் கல்வி நகரமாகிய தர்சு பட்டணத்தில் பிறந்த யூதர். பிறப்பிலே ரோம சிலாக்கியமுடையவர். எருசலேமில் கமாலியேலின் சீடர்.

பெருமை—பிலி. 3:5–6

1. எட்டாம் நாள் விருத்தசேதனமடைந்தவர்.

2. இஸ்ரவேல் வம்சத்தார்,

3. பென்யமீன் கோத்திரத்தான் (யாக்கோபு, லேயாள், ராகேல்).

4. எபிரேயரில் பிறந்த எபிரேயன்.

5. நியாயப்பிரமாணத்தின்படி பரிசேயன்.

6. பக்தி வைராக்கியத்தின்படி சபையைத் துன்பப் படுத்தினவன்.

7. நியாயப்பிரமாணத்திற்குரிய நீதியின்படி குற்றஞ் சாட்டப்படாதவன்.

ஆகிலும் 'எனக்கு லாபமாயிருந்தவைகளெவைகளோ அவைகளைக் கிறிஸ்துவுக்காக நஷ்டமென்று எண்ணினேன்' (பிலி. 3:7). என்கிறார்.

சரீரம்

சரீரத்தில் சிறியவன். சிரசில் ரோமமற்றவன். கூச்சப் பார்வையுடையவன். சரீரத் தோற்றம் பலவீனம் (2 கொ. 10:10). பேச்சுத் திறமை அற்பம் (2 கொ. 10:10). அருவருக்கத்தக்க ஒரு வியாதி அவரைப் பிடித்திருந்தது (2 கொ. 12:7; கலா. 4:14).

கடவுள் சந்திப்பு

கடவுள் தம் திட்டத்தை நிறைவேற்றுகிறார். அவர் தெரிந்துகொள்கிறார்.

'அவன் புறஜாதிகளுக்கும், ராஜாக்களுக்கும், இஸ்ரவேல் புத்திரருக்கும் என்னுடைய நாமத்தை அறிவிக்கிறதற்காக நான் தெரிந்துகொண்ட பாத்திரமாயிருக்கிறான்' 9:15. அவர் தெரிந்துகொள்ளுதலும் அழைப்பும் சில சமயங்களில் ஒன்றாக வருகின்றன.

ஸ்தேவானைக் கொலை செய்யச் சவுலும் சம்மதித்தான் 8:1. பேதுருவுக்கும் பவுலுக்கும் இடையிலுள்ள இணைத்தொடர். ஸ்தேவானுடைய இரத்தசாட்சி. அவர் சித்தம் நடந்தேறச் செய்கிறார் 9:5–6.

ஸ்தேவானின் மரணக்காட்சி சவுலின் உள்ளத்தை மாற்றிற்று. 'ரத்த சாட்சிகளின்ரத்தம் திருச்சபையின் வித்து.' சவுல் மூன்று நாட்கள் காத்திருந்தார்.

சீஷர்—எருசலேமில் காத்திருக்கக் கட்டளையிட்ட ஆண்டவர் (1:5). சவுல்—மூன்று நாட்கள் (9:6–22) காத்திருக்க விரும்பினார்.

'வேத அறிவு மிஷனெரி வைராக்கியத்தை எழுப்பிவிடும்.'

அதிகமாய்த் திடன்கொண்டு இயேசுவே கிறிஸ்து என்று திருஷ்டாந்தப்படுத்தித் தமஸ்குவில் குடியிருந்த யூதர்களைக் கலங்கப்பண்ணினான் 9:22.

அங்குக் கஷ்டம் வந்தபோது எருசலேம் வந்தார். பின் அந்தியோகியா சென்று பர்னபாவோடு சபையைப் பலப்படுத்தினார். பின்பு மூன்று நீண்ட சுவிசேஷப் பிரயாணங்கள் ஐரோப்பாவிலும் சிறிய ஆசியாவிலும் செய்து சபைகளை ஸ்தாபித்தார்.

பிரயாணமாக ரோமாபுரி வரை சென்று கடைசியிலே ரோமராயனால் சிரச்சேதம் செய்யப்பட்டார். அவர் சந்தித்து ஸ்தாபித்த சபைகளுக்கெழுதிய கடிதங்களே நமக்கும் அருளப்பட்ட நிருபங்கள். பதின்மூன்று நிருபங்களை அவர் எழுதினார்.

ரத்த சாட்சியின் ரத்தம் திருச்சபையின் வித்து

1:8 தீர்க்கதரிசன நிறைவேறுதலைக் காண்கிறோம். 'பூமியின் கடைசிபரியந்தமும் சாட்சி.'

குணப்பட்டுப் பரிசுத்த ஆவியைப் பெற்ற ஊழியன் கூறியது:

மனதின் வாஞ்சை—*1* கொ. *9:22–23.*

மனத்திருப்தி—பிலி. *4:12–13.*

மரணத்திற்கு முன் அறிக்கை

2 தீமோ. *4:7–8.*

IV திருச்சபையின் தோற்றமும் வளர்ச்சியும்

அப். 1:8. 'பரிசுத்தாவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும், யூதேயாவிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும் எனக்கு சாட்சிகளாயிருப்பீர்கள்.'

1. எருசலேம்—ஆதித்திருச்சபை (யூதச் சபை)

a. காத்திருக்கக் கட்டளை வ. 5.

b. காத்திருந்தால் வாக்குத்தத்தம் *1:8.*

c. எப்படிக் காத்திருந்தார்கள் *14–15.*

பரிசுத்தாவி அவர்கள்மேல் இறங்கியதும் *1.* வரம் *2.* பிரசங்கம் *3.* பலன் *4.* சபை. இதனுல் யூதரது பொருமை, விரோதம் அதிகரித்தது.

1. ஸ்தேவான் ரத்தசாட்சியாய் மரித்தார் *(6:7–8,10)*

2. அப்போஸ்தலர் தவிர மற்ற யாவரும் யூதேயா, சமாரியா தேசங்களில் சிதறிப் போனுர்கள் *(8:1).*

அவர்கள் விதைக்கப்பட்டார்கள். அதனுல் சபைகள் முளைத்தன.

3. சமாரியா சென்ற பிலிப்பு அங்கே நல்ல பிரசங்க ஊழியமும், அற்புதங்களும் செய்தார் *8:5–8.*

யூதர் விரோதம் முற்றிற்று

சவுல் நாசவேலை *9:1–2.*

தமஸ்கு செல்லும் பாதையில் கடவுளைச் சந்தித்து, குணப்பட்டுப் பின் அழைக்கப்பட்ட ஊழியன்.

தமஸ்குவிலும், எருசலேமிலும் சிறிது காலம் ஊழியம் செய்தார்.

2. அந்தியோகியா சபையைப் பலப்படுத்தினுர் *13:1–3.*

அந்தியோகியா பட்டணம்

அந்தியோகியா சபை

அந்தியோகியா சபையில் 5பேர் ஊழியர் *13:1.*

3. நமது முன்னோர்களின் சபை *20:28.*

சபை—ஆண்டவராகிய ஏசு தம்முடைய சுய ரத்தத்தினுலே சம்பாதித்துக் கொண்ட தமது சபை—நாம் அதைப் பாரம்பரியமாக சுதந்திரமாகப் பெற்றுக்கொண்டே வருகிறோம்.

1. ரத்தம் சிந்திப் பாடுபட்டுச் சம்பாதித்தார்.

2. அவரது அடியார்கள் பலவிதமான துன்பங்கள் மூலம் அதைக் கட்டினுர்கள். சுதந்திரத்தைக் காத்தார்கள். ரத்த சாட்சிகள் கற்களால், வாளால், நெருப்பில், தண்ணீரில், மற்றும் மீன், மிருகங்கள் ஆகியவற்றுக்கு இரையானுர்கள். பலர் சிறைவாசமும் மரண தண்டனையும் பெற்றுர்கள். அதனுலே நம்மை எபிரேய நிருப ஆசிரியர் நம் சுதந்திரத்தைக் காக்கவும் பெருக்கவும் நம் சபை பொறுப்பை நல்வாழ்வை நம் உத்திரவாதமென்று உணரவும் உற்சாகப்படுத்துகிறுர். முன் சென்ற பக்தர்களைக் குறித்து 'மேகம் போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்துகொண்டிருக்க' (எபி. *12:1*) என்று எழுதுகிறுர். கடந்த நூற்றுண்டுகளில் இன்னும் எவ்வளவோ சாட்சிகள் தோன்றி நம்மைச் சூழ்ந்திருக்கிறுர்கள்.

அப்போஸ்தலர் நடபடிகளில் நாம் காணும் திருச்சபை

1. சர்வ ஜன அபிமானமுள்ள சபை
2. மனதாரக் கீழ்ப்படியும் சபை
3. வேத போதனை நிறைந்த சபை
4. வளரும் சபை
5. உதாரத்துவம் நிறைந்த சபை
6. பரிசுத்த ஆவியால் நிறைந்த சபை.

பெந்தேகோஸ்தே சபை—மனமாறுதல்.

பெந்தேகோஸ்தே—உயிர்தெழுதலுக்குப்பின் 50 நாட்கள் கொண்டாடப்பட்ட பண்டிகை. திருச்சபையின் ஜனன நாள். யூதரது பெரிய அறுப்புப் பண்டிகை. அன்று பெந்தேகோஸ்தே வரம் அருளப்பட்டது.

3000 பேர்—அறுப்பின் முதல் விளைச்சல் கடவுளுக்குச் சமர்ப்பிக்கப்பட்டார்கள்.

சபை பெருக்கத்தின் அடையாளம்

1. பலத்த காற்று	:	ஆவி. எதிர்க்கமுடியாத வல்லமை. காற்றைப்போல் காணப்படாதது. கிரியையிலோ மிக்க வல்லமையுடையது. ஏசா. 37:9; யோபு 38:1; சங். 104:3; யோ. 3:8.
2. அக்கினிமயமான நாவு	:	ஆவி, பலவித ஆசீர்வாதங்கள். (உ-ம்) சுத்திகரிப்பு, பலம், ஞானம், வாக்குரிமை, தைரியம் முதலியன.
3. வெவ்வேறு பாஷைகள்	:	9–11 சொல்லப்பட்ட தேசத்தார் வழங்கிய பாஷைகள்.

பேதுருவின் மாறுதல் பரிசுத்த ஆவியின் வல்லமையே

பெந்தேகோஸ்தே		பாகங்கள்	(அதி. 2)
1.	,,	வரம்	1–13
2.	,,	பிரசங்கம்	14–36
3.	,,	பலன்	37–41
4.	,,	சபை	42–47.

முதல் பாகம் *1–12* அதிகாரங்கள்

அதிகாரம் 1

இயேசு பரமேறுதல்

பாகங்கள் *1. முகவுரை 1–5*

2. பரமேறுதல் 6–11

3. சீஷரின் ஆயத்தம் 12–26 (மா. 3:16–18).

1–5 முகவுரை

1. ஆக்கியோன் தன் முதல் பிரபந்தத்தைத் தேயோப்பிலுவுக்குச் சுட்டிக்காட்டி, உயிர்த்தெழுந்தபின் இயேசு நாற்பது நாட்களில் செய்த விஷயங்களைக் கூறுகிறார்.

2. மிஷனெரி ஊழியத்திற்கு வேண்டிய வல்லமை உள்ளத்திலிருந்து வரவேண்டும் என்றும்,

3. தாம் போய் பரிசுத்தாவியை அனுப்புவேன் என்றும்,

4. அதைப் பெறுமட்டும் எருசலேமில் காத்திருக்க வேண்டும் என்றும், உயிர்த்தெழுந்த இரட்சகர் தம் சீஷருக்கு வற்புறுத்திக் கூறுகிறார்.

நடபடிகள் முகவுரையை லூக்கா *24:46–53* ஒடு ஒப்பிட்டுப் பார்க்கவும்.

தேயோப்பிலு: தியாபிலஸ் என்னும் கிரேக்கச் சொல்லுக்கு தேவநேசன் என்று அர்த்தம். இதைச் சிலர் பொதுப்பெயரென்றும், பல சாஸ்திரிகள் இவன் ஒரு ரோமை அதிகாரி என்றும் சொல்லுகிறார்கள்.

1. எருசலேம்: மோசேயின் பிரமாணத்திற்கும், கிறிஸ்துவின் பிரமாணத்திற்கும் எருசலேம் மையமான ஸ்தலம்.

2. இயேசு சிலுவையிலறையப்பட்டதும், உயிர்த்தெழுந்ததும், சீஷர் முன்னே தவறினதும் இனி அதிகமாய் உழைக்கப் போகிறதும் இங்கேதான்.

3. மோசமுள்ள இடமாயினும் கட்டளைப்படி அவர்கள் இங்கே காத்திருக்கவேண்டும்.

4. கடவுள் இங்குச் செய்யக் கொடுத்த முதற் கட்டளை— 'காத்திரு' என்பதே. ஊழியஞ் செய்யக் காத்திருந்து தக்க ஆயத்தம் செய்யவேண்டும்.

காத்திருப்பதின் பலன்

1. லௌகீக எண்ணங்கள் ஓடிப்போம்.

2. பரிசுத்த ஆவியானவர் தங்க இடமுண்டாகும்.

3. தேவ சித்தத்திற்கு அமைய முடியும்.

4. நியமித்த பாதையில் செல்லக்கூடும்.

5. தங்களை ஒப்புக்கொடுக்க ஏது உண்டாகும்.

6. ஏசாயா 40:31; யோவேல் 2:28.

நீங்கள் பெலனடைந்து. பெலன்—சும்மா இருக்கவொட்டாத வல்லமை, வேலைக்கு நெருக்கி ஏவுகிற சத்துவம். ஊக்கமான முயற்சியோடு வெளிப்படுகிற வல்லமை.

கற்பாறை உடைக்கும் மருந்து (Dynamite).

இங்குக் கூறப்படும் பெலன் (Dunamis) இரண்டும் ஒரே அர்த்தமுடைய கிரேக்க பதங்கள்.

7. எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்: மரணம் நேரிட்டாலும் கண்ணாரக் கண்டதை உள்ளபடி சொல்வதே சாட்சி. ஏசுவைப்பற்றிக் கண்ட விஷயங்களைச் சீஷர் கூறவேண்டும்.

6–11 பரமேறுதல்

ஏசு 40 நாட்கள் காணப்பட்டதும், பரத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டதும் இங்குத்தான் கூறப்பட்டிருக்கிறது.

பரமேறின ஒலிவமலை எருசலேமுக்கும் பெத்தானியாவுக்கும் மத்தியிலுள்ளது.

ஓய்வு நாள் பிரயாண தூரம் 2000 முழம்.

இராஜ்ஜியம் பரிசுத்த ஆவியைப் பெறுமளவும் சீஷர் லௌகீக எண்ணமுடையோராகவே இருந்தார்கள். அவர்கள் தப்பான கேள்விக்கு இயேசுவின் பொறுமையான உத்தரவு.

சீஷரின் ஆயத்தம் 12–26 (சீஷர் நாமம் மத். 10:2–4; மா. 3:13–19; லூ. 6:14–16).

2 வகை 1. அக ஆயத்தம் 2. புற ஆயத்தம்.

A. அக ஆயத்தம் ஒருமனப்பட்டார்கள் வ. 14

1. ஜெபத்திலும் வேண்டுதலிலும் தரித்திருந்தார்கள்.

2. பிரிந்து நின்ற இயேசுவின் சகோதரர் இப்போது சேர்ந்துகொண்டார்கள்.

3. தூர நின்ற தாய்மார் இப்போது கூட வந்தார்கள்.

4. முதலிடமும் வலதிடப் பக்கமும் வேண்டுமென்ற சீஷர் தாழ்மையைத் தரித்துக்கொண்டார்கள்.

5. இதுவரை ஊழியஞ் செய்து திரிந்த சகோதரிகள் இன்னமும் ஒற்றுமையாயிருந்தார்கள்; பிரிவினை போய் ஒற்றுமையுண்டாயிற்று.

B. புற ஆயத்தம்—தரித்திருந்தார்கள் வ. 14

மூலபாஷை அர்த்தம்—யாக்கோபு போராடினதுபோல ஒரே பிடியாயும் கவனமாயும் ஒரு கோட்டையை முற்றுகை செய்கிறவர்கள்போல் விடாமுயற்சியாயிருத்தல். பத்து நாட்கள் சீஷர் தங்கள் பெலவீனத்தையுணர்ந்து, அறிக்கையிட்டு மிக ஊக்கமாய்ப் பெலனுக்காக மன்றாடினார்கள். ஜெபத்தில் தரித்திருப்போர் ஜெயமடைவார். சுவிசேஷ ஊழியம் செய்வோருக்கு ஜெபம் இன்றியமையாதது. குறைவானதை நிறைவாக்கிப் பரிசுத்தாவியைப் பெற ஆசித்து மத்தியாவை ஏற்படுத்திக்கொண்டார்கள்.

கர்த்தாவே—எகோவாவே

இப்பதம் நடபடிகளில் 100 விசை சொல்லப்படுகிறது. அவரே சகலத்தையும் செய்தவர்.

மத்தியா: 70 சீஷரில் ஒருவன் என்பது பாரம்பரியம். இவர் இரட்சகருக்காகப் பாடுபட்டார். விஷத்தை அருந்தின போதும் சாகவில்லை என்று பேபியஸ் கூறுகிறார்.

யூதாஸ்: மத். 27:3–8இல் சொல்லப்பட்டிருக்கும் சம்பவத்திற்கும் இதற்கும் சற்று வித்தியாசமுண்டு. இவ்விரண்டு வரலாறுகளிலும், நடபடிகளில் காணும் வரலாறே ஏற்கத்தகுந்தது என்பது பலர் அபிப்பிராயம்.

சீட்டுப் போட்டார்கள்

பெந்தேகோஸ்தேவுக்குப்பின் இவ்வழக்கம் கிறிஸ்தவச் சபையிலிருந்ததாகக் காணப்படவில்லை.

அதிகாரம் 2

பெந்தேகோஸ்தே

1.	பெந்தேகோஸ்தே	வரம்	1–13
2.	,,	பிரசங்கம்	14–36
3.	,,	பலன்	37–41
4.	,,	சபை	42–47.

பெந்தேகோஸ்தே வரம் 1–13

பெந்தேகோஸ்தே நாள் திருச்சபையின் ஜனன நாள். பெந்தேகோஸ்தே என்பதற்கு ஐம்பதாவது என்று பொருள்.

பஸ்கா முடிந்து 50 நாட்களுக்குப்பின் கொண்டாடப் பட்ட பிரதான உற்சவம் இது. இது யூதருடைய பெரிய அறுப்புப் பண்டிகை. திரளான யூதர் எருசலேமில் கூடித் தங்கள் முதற் பலன்களைச் செலுத்தும் இத்தினத்தில் பெந்தே கோஸ்தே வரம் அருளப்பட்டது. 3000 பேர் முதல் விளைச்சல் போலக் கடவுளுக்குச் சமர்ப்பிக்கப்பட்டார்கள். இது கிறிஸ்தவச் சபை பெருக்கத்திற்கு அடையாளமாயிற்று. சீனாய் மலையி லருளப்பட்ட பிரமாணத்தை நினைவுகூரும் பொருட்டு இப் பண்டிகை நியமிக்கப்பட்டது. மெய்யான பஸ்கா ஆட்டுக் குட்டியாகிய கிறிஸ்து மரித்த 50 நாட்களில் பரிசுத்த ஆவியின் பிரமாணம் சபையை ஆண்டுகொண்டது.

ஆண்டவர் உபயோகிக்கும் ஓர் வல்லமையான ஏது கரணம்.

பலத்த காற்று—ஆவியானவரின் எதிர்க்கமுடியா வல்லமை எசே. *37:9*; யோபு *38:1*; சங். *104:3*; யோ. *3:8*.

அக்கினிமயமான நாவு—ஆவியானவரின் பலவித ஆசீர் வாதங்கள் (உ-ம்) சுத்திகரிப்பு, பலம், ஞானம், வாக்குரிமை முதலியன.

வெவ்வேறு பாஷைகள்—*9–11*இல் சொல்லப்பட்ட தேசத் தார் வழங்கிய பாஷைகள்.

பெந்தேகோஸ்தே பிரசங்கம் 14–36

இயேசுவை உயர்த்திக் காட்டினதே இப்பிரசங்கம்.

1. இந்த அதிசயத்தின் காரணம் யோவேல் தீர்க்க தரிசனத்தின் நிறைவேறுதல் *(14–21)* (யோவேல் *2:28–32*) காண்க.

2. இந்தத் தீர்க்கதரிசனம் நீங்கள் கொலைசெய்தும் உயிரோடெழுந்த இயேசுவில் நிறைவேறிற்று *(22:28)*.

3. இயேசுவின் உயிர்த்தெழுதலைத் தாவீது தீர்க்கதரிசன மாகக் கூறினான் *(29–36)* (சங். *16:8–11*).

4. நீங்கள் மனந்திரும்பினால் பாவமன்னிப்பைப் பெறு தலின் அடையாளமாகிய ஞானஸ்நானத்தைப் பெறுங்கள். அப்போது பரிசுத்த ஆவி உங்களுக்கும் அருளப்படும் *(38–40)*.

மூன்றுவிதமான சாட்சிகள்

a. வேதத்தின் சாட்சி *25–31*

b. சீஷரின் சாட்சி *32*

c. பரிசுத்தாவியின் சாட்சி *33*.

3. பெந்தேகோஸ்தே பலன் 37–41

பாவ உணர்ச்சி, நடுக்கம், இருதயத்திலே குத்தப்பட்டு, ஜனங்கள் நாங்கள் என்ன செய்யவேண்டுமென்று கேட்டுப் பேதுருவின் வார்த்தையைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டு ஞானஸ்நானம் பெற்றார்கள். அன்று 3000 பேர் சபையில் சேர்க்கப்பட்டார்கள்.

4. பெந்தேகோஸ்தே சபை 42–47

ஆதித் திருச்சபையின் அழகு

1. அப்போஸ்தலரின் உபதேசம்

2. அந்நியோந்நியம்

3. நற்கருணை ஆசரிப்பு

4. தனி, பொது ஜெபம்

5. மனதாரப் பொருளைப் பொதுவாக அனுபவித்தல்

6. தேவாலய, ஜெபாலய ஆராதனை

7. ஏக சந்தோஷம்.

நற்கருணை ஒவ்வொரு சாப்பாட்டிற்குப் பின்னும் பரிமாறப் பட்டது.

பிறவிச்சப்பாணி

1. அற்புதம் 1—11

2. அற்புதத்தின் பேரில் பிரசங்கம் 12—26.

அற்புதம் 'அப்போஸ்தலர்களாலே அநேக அற்புதங்களும் அடையாளங்களும் செய்யப்பட்டன' (2:43). இந்த அற்புதமே முதல் துன்பத்திற்குக் காரணமாயிருந்தது. பின்பு நேரிட்ட துன்பங்களுக்கு இவ் அற்புதம் ஓர் ஏதுகரமாயிருந்தது.

ஜெபவேளை யூதர் நிதமும் மூன்றுவேளை ஜெபிப்பது வழக்கம்.

1. காலை—பலிசெலுத்தும் வேலை—3ஆம் மணிவேளை 9·00 காலை

2. ஆறும் மணிவேளை—12·00 நண்பகல்

3. சாயங்காலம்—பலி செலுத்தும் வேளை. 9ஆம் மணி வேளை 3·00 மாலை.

தாவீது அந்தி, சந்தி, மத்தியான வேளைகளில் ஜெபம் செய்தார் சங். 55:17.

தானியேல் இப்படியே செய்தார் தானி. 6:10. இந்த யூத வழக்கம் ஆதித்திருச்சபையிலுமிருந்தது.

அலங்கார வாசல் கொரிந்து பட்டணத்துச் சுத்த வெண்கலத்தால் இவ்வாசல் செய்யப்பட்டதாக ஜொசிபஸ் சொல்லுகிறார். 50 முடி உயரமுள்ளது. சில பாகங்கள் பொன்னாலும் வெள்ளியாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன. இது தேவலாயத்தின் வெளிப்பிரகாரத்திலிருந்து உள்ளே செல்லும் படிக்கட்டின்மேல் நின்றது.

நாமம் வெளிப்பட்ட இலட்சணங்கள், வல்லமை, குறிக்கப்படும் ஆள். ஆவிக்குரிய யாவும் வெளிப்படும்.

சாலமோன் மண்டபம் தேவலாயத்தின் கீழ்ப்பாரிசத்தில் சாலமோனால் கட்டப்பட்ட மண்டபம்.

பேதுரு செய்த இரண்டாம் பிரசங்கம்

இதிலும் கிறிஸ்துவின் மகிமையையே கூறுகிறார். இதில் வரும் இருபெரும் கருத்துக்களாவன: 1. நாமம் 2. இஸ்ரவேலின் நம்பிக்கை. இது இயேசு நாம சங்கீர்த்தனமே. பல நாமங்களாவன:

1. தேவனுடைய (பிள்ளையாகிய) இயேசு
2. பரிசுத்தமும் நீதியுமுள்ளவர்
3. ஜீவாதிபதி
4. தீர்க்கதரிசி.

இளைப்பாறுதலின் காலங்கள் வ. 19

மேசியாவாகிய லோக இரட்சகர் வரும்போது நல்ல காலம் பிறக்குமென்றும், பூலோகமானது பரலோகம்போல் செழிக்குமென்றும் யூதர் ஆவலாய் எதிர்பார்த்திருந்தனர் (உபா. 18:15; ஏசா. 25:1–6; எசே. 37:1–14; லூ. 1:70). இந்நம்பிக்கைக்கு அவர்கள் மனந்திரும்பி இயேசுவை ஏற்றுக்கொள்ளவேண்டியது.

ஆகவே இவ்வற்புதத்தை நடப்பித்தவர் உயிர்த்தெழுந்த இயேசுபெருமான் என்றும், அவரே யூதருக்கு இளைப்பாறுதலின் காலத்தை வரப்பண்ணுகிறவர் என்றும் ஒப்புக்கொண்டால், யூத அதிகாரிகள் அவரை ஒப்புக்கொடுத்ததும், மரணத்துக்குள்ளாக்கி, சிலுவையிலறைந்ததும் பெரிய பாவம் என்பது தெளிவாகும் (வாக். 18).

பிரசங்கத்தின் பலன்

1. விரோதம் அதிகரித்தது. அப்போஸ்தலரைக் 'காவலில் வைத்தார்கள்' 4:3.

2. 'வசனத்தைக் கேட்டவர்களிலநேகர் விசுவாசித்தார்கள். அவர்கள் தொகை ஏறக்குறைய ஐயாயிரமாயிருந்தது' 4:4.

அதிகாரம் 4

சனதரீம் சங்கம்

1. சங்கத்தாருக்குச் சாட்சி பிரசங்கம் 1–22
2. சபையில் புது ஜெப சிந்தை 23–31
3. சபையாருடைய கிறிஸ்தவ ஐக்கியம் 32–37.

சங்கத்தாருக்குச் சாட்சி பிரசங்கம் 1–22

பேதுருவையும் யோவானையும் சினங்கொண்டு பிடித்ததற்குக் காரணம்:—

1. அவர்கள் ஜனங்களுக்கு உபதேசித்தார்கள் (2)

2. சதுசேயர் விசுவாசியாத உயிர்த்தெழுதலைப் பிரசங்கித்தார்கள் (2).

3. அவர்கள் படிப்பறியாதவர்களும், பேதமையுள்ளவர்களாயுமிருந்தார்கள் (13)

4. ஜனங்களுக்குப் பயந்தார்கள் (21)

5. தேவாலயத்தில்

6. பலி நேரத்தில் பிரசங்கித்தார்கள்

7. ரபிகளல்ல

8. ஆசாரியருமல்ல.

சனதரீம் சங்கம் (அதிகாரம் சர்வ பூமிக்குமுடையது. தலைவன் பிரதான ஆசாரியன். சங்கம் கூடுவது தேவாலயம்) யூதச் சபையின்மேல் விசாரணை செய்தது இச்சங்கமே. 71 அல்லது 72 பேர் அடங்கியது. மூ வகுப்புள்ளது.

1. அதிகாரிகள், பிரதான ஆசாரியன், தேவாலய உத்தியோகஸ்தர், ரோம ராஜ்ஜியத்திற்குச் சார்பாய் நடந்தவர்கள் (உ-ம்) காய்பா. இவர்களனைவரும் சதுசேயர்.

2. மூப்பர் சபையின் முக்கியஸ்தர். அரிமத்தியா, யோசேப்பு போன்ருேர்.

3. வேதபாரகர் (உ-ம்) கமாலியேல், சவுல் இவர்கள் பரிசேயரே.

அவராலேயன்றி, வேறெருவராலும் இரட்சிப்பு இல்லே என்று உத்தம சாட்சி கொடுத்தார்கள் 4:12.

பலன் என்ன?

1. அதிகாரிகள் ஆச்சரியப்பட்டார்கள் (13)

2. அவர்கள் ஏசுவோடிருந்தவர்களென்று (13) அறிந்து கொண்டார்கள்

3. அவர்களுடைய உபதேசத்தைப்பற்றிப் பயமுண்டாயிற்று (16–18)

4. ஜனங்களுக்குப் பயந்து, தண்டிக்க வகை காணுமல், அவர்களேப் பயமுறுத்தி விட்டுவிட்டார்கள் (21)

5. சீஷருக்குத் தைரியம் அதிகரித்தது.

'நாங்கள் கண்டவைகளேயும் கேட்டவைகளேயும் பேசாமலிருக்கக்கூடாதே' (20).

விடுதலே 1. திட்டமான குற்றம் இல்லே. 2. ஜனங்கள் பேதுரு யோவான் பக்கமிருந்தார்கள். 3. அப்போஸ்தலர் கூறியதை மறுக்க முடியாது.

சபையாரின் புது ஜெபசிந்தை 23–31

ஊக்க விண்ணப்பம்: துன்பமே ஜெபத்திற்குத் தூண்டுகோல்

அழுகையின் பள்ளத்தாக்கை உருவ நடக்கிறவர்களே சங்கீதம் பாடுவார்கள் (சங். 84:6).

'துன்ப நேரத்தில் வீட்டில் முழந்தாளில் நில்!'
அதிக அற்புதங்களுக்காக ஜெபம் (30)
குணமாக்கும் வரத்திற்காக ஜெபம்
தைரிய சாட்சிக்காக ஜெபம்
ஒருமனப்பட்டு ஜெபம்.

சபையாருடைய கிறிஸ்தவ ஐக்கியம் 32–37

ஜெபம்—ஐக்கியம்—அற்புத அடையாளம்

1. ஒரே மனம் (32)

2. சகலமும் பொதுவாயிருந்தது (32)

3. பலமாய்ச் சாட்சி கொடுத்தார்கள் (33)

4. பூரண கிருபை உண்டாயிருந்தது (33) 2:47 (தேவ அநுக்கிரகம்—மனிதர் தயவு) லூ. 2:52.

பர்னபா இது எபிரேய மொழி—'தீர்க்கதரிசன புத்திரன்.' கிரேக்க மொழி—'ஆறுதலின் மகன்' அல்லது 'போதனேயின் மகன்.' 70 சீஷரில் ஒருவன், லேவியன், சீப்புரு தீவான். 13,14ஆம் அதிகாரங்களில் இவனுடைய ஊழியம் சொல்லப்பட்டிருக்கிறது. சபையில் புகழ் பெற்றவனுயிருந்ததால் இவன் பெயர் விசேஷித்துக் கூறப்பட்டிருக்கிறது. பொது உடமையின் சிறந்த அத்தாட்சி.

அதிகாரம் 5

அனனியா

1. அனனியா சப்பீராளின் மரணம் 1—11
2. அப்போஸ்தலருடைய சாட்சி 12—32
3. கமாலியேலின் ஆலோசனை 33—42.

அனனியா சப்பீராளின் மரணம் 1—11

பண ஆசை எல்லாப் பாவங்களுக்கும் வேர்.

பாவம்—மாய்மாலம் அவிசுவாசத்திலும் கொடியது. இதைப்போன்ற பாவம்—யோசுவா 7இல் உண்டு (ஆகான்). கொடுக்க வேண்டுமென்ற கட்டாயமிருந்ததில்லை. இது திருச்சபையில் தோன்றின.

முதல் மாய்மாலம். கடவுளின் நீதியான தீர்ப்பு உடனே லபித்தது. ஆகான் குற்றமும் அனனியாவின் குற்றமும் ஒன்றே. இரண்டு எஜமான்களுக்கு ஊழியம் செய்ய முடியாது.

அனனியா — ஏகோவா கிருபை மிகுந்தவர். யூதருள் சாதாரணப் பெயர் ஏரே. 28:1; அப். 9:10—11 அப். 23:2.

சப்பீராள் — வச்சிரக்கல் அல்லது அழகு —சவுந்தரியம்.

மரணத்தின் பலன்கள்

1. சபை முழுவதும் பயமுண்டாயிற்று (11)

மாய்மாலம் செல்லாதென்பதை அறிந்துகொண்டார்கள். மாயக்காரர் சபையில் சேர அஞ்சினர்கள் (13).

2. அப்போஸ்தலர் சுவிசேஷத்தைத் தாராளமாய்ப் பிரசங்கிக்க ஏது உண்டாயிற்று (13)

சாலமோன் மண்டபத்தையே பிரசங்க இடமாக தெரிந்துகொண்டார்கள் (12)

3. திரளான புருஷரும் ஸ்திரீகளும் விசுவாசமுள்ளவர்களாகிக் கர்த்தரிடமாகச் சேர்க்கப்பட்டார்கள் (14).

2. அப்போஸ்தலருடைய சாட்சி 12—32

1. அப்போஸ்தலர் சிறையடைதல் 2. அற்புத விடுதலை 3. சனதரீம் சங்கத்தின் முன் சாட்சி. துன்பத்திற்குக் காரணம் பொறாமை (17) பயம் (28).

4:30—ஜெபத்தின் பலன் கிடைத்தது 5:12—20.

1. துன்பம் அதிகரிக்கிறது. முதல் சிறை பேதுரு, யோவான் மட்டும். இப்போது சிறையில் அப்போஸ்தலர் அனைவரும் அடைக்கப்பட்டார்கள்.

2. முதல் சிறையில் அடிபடவில்லை (4:21). இப்போது சிறையில் அனைவரும் அடிபட்டார்கள் (5:40). கமாலியேல் முதலியோர் அப்போஸ்தலர் சார்பாகப் பேசாமலிருந்திருந்தால் கொலை நடந்திருக்கும் (5:33).

‘அந்த நாமத்தைக் குறித்து’ (28)

இயேசு என்ற நாமத்தை உச்சரிக்க மனமில்லாமல் இகழ்ச்சியாய் ‘அந்த நாமத்தைக் குறித்து’ என்று பிரதான ஆசாரியன் சொல்லுகிறான்.

பேதுருவின் பதில் (29—32) மூன்று சத்தியங்கள்

1. மனுஷருக்குக் கீழ்ப்படிவதைப் பார்க்கிலும் தேவனுக்குக் கீழ்ப்படிவதே அவசியம் (29)

2. நம்முடைய பிதாக்களின் தேவனே இந்த இயேசுவை எழுப்பிச் சாட்சி கூற எங்களை ஏற்படுத்தினார் (32)

3. இதற்குப் பரிசுத்தாவியும் சாட்சி (32).

3. **கமாலியேலின் ஆலோசனை 33—42**

மூர்க்கமடைந்து—மூல பாஷையில் தங்கள் இருதயம் வாளால் அறுக்கப்பட்டு...

கமாலியேல்: பெயர் பெற்ற யூத சாஸ்திரியான ஹில்லல் என்பானின் பேரன். சவுலின் ஆசிரியன். அக்காலத்துத் தேர்ந்த அறிவாளி, பெருந்தன்மையுடையோன். எருசலேம் அழிவுக்கு 18 வருஷங்களுக்கு முன் இறந்துபோனான்.

உபத்திரவத்தின் பலன்கள்

உபத்திரவம் இன்னும் அதிக ஆசீர்வாதத்தைக் கொண்டு வந்தது (Troubles are blessings in disguise).

பலத்த சாட்சி (29—32)
சபைக்கு இடைவிடாத உபதேசம் (42) பிலி. 1;29
ஜனங்களுக்குத் தைரியப் பிரசங்கம் (42) பிலி. 1:29.

அதிகாரம் 6

மூப்பன்மார்

1. மூப்பரைச் சபை ஏற்படுத்தினது 1–7
2. ஸ்தேவான் சிறையாக்கப்பட்டது 8–15.

1. **மூப்பரைச் சபை ஏற்படுத்தினது 1—7**

இதுவரை கிறிஸ்து சபை பிறந்த இடமாகிய எருசலேமிலே வளர்ந்தது. இனிமேல் சமாரியா, செசரியா, கிறிஸ்து சபையின் மூலஸ்தானமாகிய அந்தியோகியா செல்லுகிறது. சுவிசேஷம் இதுவரை யூதருக்கு மாத்திரம் பிரசங்கிக்கப்பட்டது. இனிமேல் யூதருக்கும், புறஜாதியாருக்கும், விசேஷமாய்ப் புறஜாதியாருக்கும் பிரசங்கிக்கப்படுகிறது. 6–12 அதிகாரங்களில் திருச்சபை ஆரம்பித்த காலத்தில் வசித்த ஜனங்களை மத சம்பந்தமாக 5 பிரிவாகப் பிரித்திருக்கிறது.

கிறிஸ்து சபை முதல் எபிரேயருக்குள் பரம்பினது. சீஷர் யாவரும் எபிரேயரே.

1. எபிரேயருக்குள்ளும் (பலஸ்தீனாவின் எல்லா யூதர், சீஷர்) பேதுரு, யோவான்.

2. கிரேக்க யூதருக்குள்ளும் (ஸ்தேவான், பர்னபா, பவுல்)

3. யூத மார்க்கத்தமைந்தவர்களுக்குள்ளும் (நிக்கொலா, எத்தியோப்பியன்)

4. தேவபக்தியுள்ள புறஜாதியாருக்குள்ளும் (கொர்நேலியு, லீதியாள்)

5. விக்ரகாராதனைக்காரரான புறஜாதியாருக்குள்ளும் வியாபித்தது. (லீஸ்திரா பட்டணத்தார், கொரிந்தியர், அத்தேனர்).

சுவிசேஷத்தை உள்ளபடி முதல் அறிந்தவர்கள் கிரேக்க யூதரே. ஸ்தேவான் கிரேக்க யூதன். இவனே சுவிசேஷம் சர்வ ஜனத்திற்கும் உரியது என்று காட்டினுன். பின்பு பவுல் அதை எடுத்து எங்கும் கூறினர்.

நூதன உத்தியோகம்

சபை பெருக்கத்தால் விசாரணே வேலே சரிவர நடக்காத தால் முறுமுறுப்பு காணப்பட்டு, கிரேக்கர் திறமைவாய்க்கா தவராதலால் ஏழு உதவிக்காரரைச் சபை தெரிந்து எடுத்தது.

நிக்கோலா—யூதமார்க்கத்தமைந்த புற ஜாதியார்.

அவர்கள் மேல் கைகளே வைத்தார்கள் (5)

1. சிரசில்—ஆசீர்வாதம்—ஆதி. 48:14–20

2. ஒரு உத்தியோகத்திலமர்த்த—எண். 27:18–23

3. குற்றத்தைச் சாட்ட—லேவி 3:2; 1:4

4. இயேசு சிறுபிள்ளேகளே ஆசீர்வதித்தார்

1. மா. 10:16

2. பிணியாளிகள் மா. 1:41.

பரிசுத்தாவியின் அருட்பிரகாசம் அடைய 2 தீமோ. 1:6 உள்ளான கிருபையின் புறம்பான அடையாளம்.

பலன் (வ. 8)

1. தேவ வசனம் விருத்தியடைந்தது

2. சீஷர் தொகை எருசலேமில் மிகவும் பெருகிற்று

3. ஆசாரியர்களில் அநேகர் விசுவாசித்துக் கீழ்ப்படிந் தார்கள்.

லிபத்தினர் வ. 9—முதலில் ரோமருக்கு அடிமைகளா யிருந்து பின்பு தங்கள் எஜமான்களால் சுயாதீனம் பெற்ற யூதர்.

ஸ்தேவான்மேல் சாட்டப்பட்ட குற்றங்கள் 9–15 (யோ. 4:21)

1. நசரேயனுகிய இயேசு எருசலேமை அழித்துப் போடுவார்.

2. நசரேயனுகிய இயேசு மோசேயின் நியாயப் பிரமா ணத்தை (விருத்தசேதனம்—சடங்குபிரமாணத்தை) மாற்று வார்.

சிலிசியா நாட்டார் (வ. 9) இவர்களில் சிலர் எழும்பித் தர்க்கித்தனர். அவர்களுள் சவுலும் ஒருவன். ஸ்தேவா னின் ஞானத்தை எதிர்க்க, ஒருவராலும் கூடவில்லே. ஸ்தேவானுடைய உபதேசத்தைப் பின்னர் உலகப் பிரசித்தி யாக்கியது இந்த சவுலாகிய பவுலே.

அதிகாரம் 7

ஸ்தேவான்-கிரீடம்

1. ஸ்தேவான் சொன்ன பிரதிவாதம் 1–53

2. ஸ்தேவான் கல்லெறியப்பட்டது 54–60.

1. ஸ்தேவானின் பிரதிவாதம் 1–53

சதுசேயர் கோபமடைந்தனர்—அவர்கள் காத்து வந்த தேவாலயத்தைத் தூஷித்ததால்.

பரிசேயர் கோபமடைந்தனர்—அவர்கள் மதித்துப் பாராயணஞ் செய்த வேதத்தைத் தூஷித்ததால்.

தன்மேல் சாட்டப்பட்ட இரு குற்றங்களையும் நிராகரிக்க

ஸ்தேவான் எடுத்த இரு முறைகளாவன

1. பரிசுத்த ஸ்தலம் எருசலேம் மாத்திரமல்ல. ஏகோவா வெளிப்பட்ட இடங்களெல்லாம் பரிசுத்த ஸ்தலம் வ. 2,30,44,47–49.

2. வேதப்படி இஸ்ரவேலர் தேவ வசனங்களுக்குக் கீழ்ப்படியவில்லை. கிறிஸ்துவைப்பற்றித் தீர்க்கதரிசனங்களுண்டு வ. 9,35,37,39,41,53. கமாலியேலல்ல, ஸ்தேவானுமல்ல, இந்தப் பிரதிவாதமே பவுலுக்கு அருளுபதேசம் ஊட்டியது.

2. ஸ்தேவான் கல்லெறியப்பட்டது 54–60

பிரசங்கத்தின் கடைசியில் அவனது சாட்சியைக் கேட்டதும் சதுசேயர், பரிசேயர் அவரை நகரத்திற்குப் புறம்பே தள்ளிக் கல்லெறிந்து கொன்றார்கள்.

இப்பொழுது நீங்கள் அவருக்குத் துரோகிகளும் அவரைக் கொலை செய்த பாதகருமாயிருக்கிறீர்கள் வ. 52.

சவுல் நடபடி ஆகமத்தின் நடுநாயகம். இங்குத்தான் அவர் முதன் முறையாக சொல்லப்படுகிறார். ஸ்தேவானின் ஊழியத்தை இனி தொடர்ந்து செய்யப்போகிறவர் இவரே. ஸ்தேவானின் ஜெபத்தால் திருச்சபைக்குப் பவுல் என்னும் ஞானப்பிள்ளை பிறந்ததென்று சொல்லலாம்.

'மனுஷகுமாரன் தேவனுடைய வலது பாரிசத்தில் நிற்கிறதைக் காண்கிறேன்'

ஸ்தேவானும் ஆதித்திருச்சபையும் கொடுத்த சாட்சி யூத மார்க்கத்தைக் கவிழ்த்து, ரோம ராஜ்ஜியத்தை ஜெயித்த வல்லமை இதுவே.

ராஜ்ஜியங்களை ஜெயிக்க இவ்வித சாட்சியே தேவை.

'ஆண்டவரே இவர்கள்மேல் இந்தப்பாவத்தைச் சுமத்தாதிரும்.'

ஸ்தேவானுடைய, கிறிஸ்துவுடைய கடைசி வார்த்தைகளைக் கவனிக்கவும். மத். 26:65,66.

நித்திரையடைந்தான். உத்தம கிறிஸ்தவர்களின் மரணம் நித்திரையே. கிரீடம் என்றர்த்தங் கொள்ளும் ஸ்தேவான் முதல் இரத்தசாட்சியாய் மரித்து ஜீவ கிரீடத்தைப் பெற்றான்.

'இரத்தசாட்சிகளின் இரத்தம் திருச்சபையின் வித்து'

மரணத்தின் பலன்: 1. பவுலின் இருதயம் ஆயத்தமாக்கப்பட்டது.

2. கிறிஸ்தவர்கள் யூதரது கையால் சிதறடிக்கப்பட்டு கிறிஸ்து சமயம் யூதக் கட்டை விட்டு வெளியேறி ஒளி வீசிற்று.

அதிகாரம் 8

பிலிப்பு

1. சமாரியாவில் ஊழியம் *1–13*

2. சீமோனின் லஞ்சம் *14–25*

3. எத்தியோப்பியன் *26–40.*

அதிகாரம் *3–12* முடிய சுவிசேஷம் பற்பல வித ஜனங்களுக்குச் சென்ற விதத்தை வாசிக்கிறோம். இதனால் கிறிஸ்து மார்க்கம் சர்வ ஜனமார்க்கம் என்று விளங்குகிறது.

1. சமாரியர் ஏற்றுக்கொள்ளப்படல் *8:5–25.*

2. யூத மார்க்கத்தமைந்த எத்தியோப்பியன் ஏற்றுக்கொள்ளப்படல் *8:26–40.*

3. துன்பப்படுத்தின சவுல் ஏற்றுக்கொள்ளப்படல் *9:1–8.*

4. தேவ பக்தியுள்ள கொர்நேலியு ஏற்றுக்கொள்ளப்படல் *10:1–18; 11:1–18.*

5. கிரேக்கர் ஏற்றுக்கொள்ளப்படல் *11:19–26.*

1. சமாரியாவில் ஊழியம் 1–13

'அக்காலத்திலே' மூலபாஷை 'அதே நாளிலே' ஸ்தேவான் கொலை செய்யப்பட்ட அன்றே துன்பம் ஆரம்பித்தது. 'சிதறப்பட்டார்கள்' என்னும் சொல் 'விதைக்கப்பட்டார்கள்' என்ற பொருளைத் தரும். (சமாரியாவிலும் யூதேயாவிலும் விதைக்கப்பட்டார்கள். சிதறிப்போனவர்கள் எங்கும் திரிந்து சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார்கள் சமாரியர். பூர்வத்தில் யூத வம்சத்தைச் சேர்ந்தோர் கொள்வினை கொடுப்பினையால் புறஜாதியாரோடு கலந்தவர்கள். யூத

தேவனை வணங்கி மோசேயின் ஆகமங்களை விசுவாசித்தார்கள். மேசியாவுக்காகக் காத்திருந்தார்கள். இவர்கள் தேவாலயம், ஆசாரியர் வேறே. யூதர் இவர்களது பகைவர். அசீரிய ராஜா சமாரியாவைச் சிறைப்பிடித்து, பாபிலோனிய மனுஷரைச் சமாரியப் பட்டணங்களில் குடியேற்றினான். II இரா. *17:23–31.* இவர்கள் சிங்கங்களால் வாதிக்கப்பட்டபோது இஸ்ரவேலருடைய சில ஆசாரியர்களை அனுப்பி, சிங்கங்களின் வாதையினின்று விடுவிக்கத் தேவனைப் பிரார்த்திக்கச் செய்தான். வந்த இந்த ஆசாரியர் சமாரியாவில் தங்கிப் புதிய வம்சத்தை ஸ்தாபித்தார்கள். இவர்கள் கலப்புள்ளவர்களாதலால், யூதருக்கும் இவர்களுக்கும் ஒரு சம்பந்தமுமிராமற் போயிற்று.

2. சீமோனின் லஞ்சம் 14-25

எருசலேமில் சபை பலப்பட்டுச் சந்தோஷித்தபோது அனனியா சப்பீராள் பாவம் வெளிப்பட்டது. சமாரியாவில் சபை பரிசுத்த ஆவியின் சந்தோஷத்தால் மகிழ்ந்தபோது ஒரு கிறிஸ்தவனுடைய (சீமோனின்) பாவம் வெளிப்பட்டது.

சீமோன் பாவம்—உத்தியோக ஆசை

கிறிஸ்தவனாகுமுன்—'தேவனுடைய பெரிதான சக்தி' என்று பெயர் பெற்றான். இப்பேறு நீங்கியதால் மறுபடியும் மேன்மைபெற ஆசித்தான். பெருமையினாலாவது, பொருளாசையினாலாவது கௌரவத்தைப் பெற ஆசிப்பது பாவம். லஞ்சத்தினால் சபை உத்தியோகம் சம்பாதிப்பதைப் பேதுரு கண்டிக்கிறார். சீமோன் மனந்திரும்பிக் குணப்பட்டான். அனனியாவும் சப்பீராளும் மனந்திரும்பாமல் மரித்தார்கள்.

3. எத்தியோப்பியன் 26–40

முதல் சமாரியர் சபையில் சேர்க்கப்பட்டார்கள். இப்போது புறஜாதியானாயிருந்தாலும், யூத மார்க்கத்தைச் சேர்ந்த எத்தியோப்பியன் சேர்க்கப்படுகிறான்.

முதல் சமாரியா செல்லும்போது பிலிப்பு தன்னிஷ்டமாய்ப் போனுன். அதன்பின் கர்த்தருடைய தூதனுல் வழி நடத்தப்படுகிறுன்.

மார்க்கம். வியாபார ஸ்தலம். பலத்த அரண்.

காசா. எருசலேமிலிருந்து இரண்டு நாள் பிரயாணம். பலஸ்தீனுவின் தெற்கேயுள்ளது. கடலிலிருந்து 2 மைல் தூரம். எகிப்து செல்லும் பாதையில்.

எத்தியோப்பியா. எகிப்தின் தென் பாகம். அக்காலத்தில் ராஜ ஸ்திரீகளாலே ஆளப்பட்டது.

கந்தாகே. அந்த ராணிகளின் பட்டப்பேர்.

எத்தியோப்பியா மந்திரி. மெய் தெய்வத்தைக் கண்டடைந்தான், யூத மார்க்கத்தானுகையால் சுயதேசம் விட்டு தொழுதுகொள்ள எருசலேம் வந்தான்.

ஆசோத் அல்லது அஸ்தோத்: (காசாவுக்கு 20 மைல் வடக்கே) பிலிப்பு இங்கும் பிரசங்கித்திருப்பான். ஏனெனில் இவ்விடங்களிலுள்ள பரிசுத்தர்களை ஸ்திரப்படுத்தும்படி பேதுரு அப்போஸ்தலன் சென்றதுண்டு (9:32–36).

அதிகாரம் 9

சவுல்

1. சவுல் குணப்பட்டது 1–30

2. பேதுருவின் ஊழியம் 31–48

சவுலின் குணப்படுதலின் விவரம் அதி. 9,22,26.

சவுல்

நடபடிகளின் நடுநாயகம். சுவிசேஷ சிரோமணி. ஜாதியில் யூதன். கிரேக்கக் கல்வி நகரமாகிய தர்சு பட்டணத்தில் பிறந்தவன். பிறப்பிலே ரோம சிலாக்கியம் பெற்றவன். எருசலேமில் கமாலியேலின் சீஷன். சரீரத்தில் சிறியவன் (14:12). சிரசில் ரோமமற்றவன். கூர்மைப் பார்வையுடையவன். சரீர தோற்றம் பலவீனம் (2 கொ. 10:10). பேச்சு திறமை அற்பம் (2 கொ. 10:10). அருவருக்கத்தக்க ஒரு வியாதி அவனைப் பிடித்திருந்தது (2 கொ. 12:7; கலா. 4:14), இயல்பிலிருந்த குணங்களும், மனோதத்துவங்களும், ஆவிக்குரிய வரங்களும் அவரது உயிர்த்துணையாயிருந்தன (பிலி. 3:5–8).

1. யூதரது தளரா ஊக்கம்

எந்த நிலைமையிலும் எடுத்ததை முடிக்கும் குணம் சவுலிடமிருந்தது.

2. கிரேக்கரின் சமயோசித மாறுதல்

யூதகுலத்தானுயினும், வளர்ப்பும், கல்வி, நாகரீகம் யாவும் கிரேக்க பட்டணமான தர்சுவிலேயே. 'எப்படியாயினும் சிலரை இரட்சிக்கும்படி நான் எல்லாருக்கும் எல்லாமுமானேன்' 'வாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும் தாழ்ந்திருக்

கவும் எனக்குத் தெரியும்' (பிலி. 4:12). இக் குணம் பவுலிடமிருந்தது. அத்தேனர், பேலிக்ஸ், அகிரிப்பா, சிறைச்சாலைக்காரன்—சம்பாஷணை.

3. ரோமரின் காரிய நிர்வாக வல்லமை

ஊக்கத்தில் யூதன், கல்வியிலும் மற்ற வினைகளிலும் கிரேக்கனுமான பவுல் சிந்தனைப் போக்கிலும் நடக்கையிலும் ரோமனுயிருந்தார். ரோம சிலாக்கியம் பெற்றவர்.

சவுலின் குணப்படுதல் 1–9

சனதரீம் சங்கத்திற்கு வெளிநாடு சென்றிருந்த எல்லா யூதர்கள் மேலும் அதிகாரமிருந்தது. தமஸ்குவிலிருந்த யூதர் மேலும் அதிகாரமிருந்தது. தமஸ்கு உலகத்தின் புராதன பட்டணம். எருசலேமிலிருந்து எட்டு நாள் பிரயாணம். ஆபிரகாமின் வேலைக்காரனுன எலியேசர் இவ்வூரான். தாவீது இந்தப் பட்டணத்தைத் தன் வசப்படுத்தியிருந்தான்.

சவுல் கண்ட காட்சியும், கேட்ட சத்தமும், அவனது சன்மார்க்க பிரமாணம், ஜீவியம் யாவையும் மாற்றி விட்டன.

சவுலின் மனதைப் பிளந்த சத்தியங்கள்!

1. கிறிஸ்து மரித்தவரல்ல, உயிரோடிருக்கிறவர்

2. மேசியாவாகிய அவரைத் துன்பப்படுத்தியிருந்தான்

3. ஜெயித்த பாவமற்ற பரிசுத்த இயேசுவே யாவையும் அளிக்க வல்லவர்.

அனனியா 10–19

ஒருவேளை தமஸ்குவிலுள்ள கிறிஸ்தவர்களின் தலைவனுயிருக்கலாம். இவர் பேதுரு அந்திரேயாவால் தமஸ்கு சபை மேல் அத்தியட்சனுக நியமிக்கப்பட்டுச் சில காலத்துக்குப்பின் ரத்தசாட்சியாய் மரித்தார் என்பது பரம்பரை.

19–20. 19க்கும் 20க்கும் இடையில் கலாத்தியர் 1:15–18இல் சொல்லப்பட்ட விஷயம் வரவேண்டுமென்பது பலரது அபிப்பிராயம். இந்த மூன்று வருஷங்களிலேயும், தம் கடின ஊழியத்திற்கென்று ஆயத்தம் பண்ணப்பட்டார்.

2. பேதுருவின் ஊழியம் 31–48

இரு சம்பவங்கள்

1. லித்தா ஊரிலே 8 வருஷங்களாகத் திமிர்வாதமாயிருந்த ஐனேயா குணமாக்கப்பட்டது.

2. யோப்பா பட்டணத்து தொற்காள் (தபீத்தாள்) உயிரோடெழுப்பப்பட்டது.

43ஆம் வசனம் யூதருக்குத் தோல் பதனிடும் தொழில். மகா அருவருப்பு. பேதுரு புறஜாதியாரை ஏற்றுக்கொள்ளும் நிலைமைக்குக் கடவுள் அவரை நடத்துகிறதைக் காண்கிறோம்.

அதிகாரம் 10

கொர்நேலியு

1. கொர்நேலியுவின் தரிசனம் 1–8

2. பேதுருவின் தரிசனம் 9–23

3. புறஜாதியார் 24–48.

1. கொர்நேலியுவின் தரிசனம் 1–8

கொர்நேலியு

தெய்வ பக்தியுள்ள புறஜாதியார் வகுப்பைச்சேர்ந்தவன். யூதருக்குள்ள எல்லா சிலாக்கியங்களும் இவர்களுக்கில்லை. இத்தாலியா நாட்டான். ரோம சிலாக்கியம் பெற்றவன். நூற்றுக்கதிபதி. கடவுளுக்குப் பயந்தவன். பக்தன். நன்மை செய்தவன். நண்பர் மிக்கவன். யூதரின் நண்பன். நற்சாட்சி பெற்றவன். செசரியா பட்டணம் (யோப்பாவிலிருந்து முப்பது மைல்).

இது அகஸ்துராயன் பெரிய ஏரோதுவுக்குக் கொடுத்த நகரம். ஏரோது இதை அலங்கரித்து, ஒரு கோவிலைக் கட்டி, அதில் அகுஸ்துராயன் சிலையை வைத்து, கிரேக்க நாடக சாலைகளையும், பந்தயசாலைகளையும், அரண்மனைகளையும் கட்டி அதற்கு அகுஸ்து செசரியா என்று பெயரிட்டான். இது ரோமாபுரிக்கு நேராகக் கட்டப்பட்டிருந்தது. விசேஷத் துறைமுகமுள்ளது. சகல ஜாதியாரும் இப்பட்டணத்திலிருந் தார்கள். 600 பேர் அடங்கிய ரோமப்பட்டாளம் இங் கிருந்தது. இப்பட்டாளத்தின் அதிபதியை 600க்கதிபதி அல்லது சேனுதிபதி என்பார்கள். இவனுக்குக்கீழ் ஆறு நூற்றுக்கதிபதிகளுண்டு. இவர்களில் ஒருவன் கொர்நேலியு (6000 லேகியோன்–600 ஒரு காலாட்படை 100–நூறு பேர்).

2. பேதுருவின் தரிசனம் 9–23

இங்கு விசேஷித்த ஊழியத்திற்கு பேதுரு ஆயத்தப் படுத்தப்பட்டதைப் பார்க்கிறோம். பேதுரு, லித்தா, யோப்பா பட்டண சபைகளை ஸ்திரப்படுத்திய பின்பு யோப்பா பட்டணத் திலேயே அநேக நாள் தங்கினுன். அது மத்தியத் தரை கடற்கரை துறைமுகப் பட்டணம். பெரிய வியாபாரஸ்தலம். பல ஜாதியார் இங்குக் கூடுவார்கள். புற ஜாதியாரிடம் ஊழியம் செய்ய ஒரு தைரியசாலி தேவை. தேவன் பன்னிரு வரில் ஒருவனும், எபிரேயனுமான பேதுருவையே தெரிந்து கொண்டார். ''தேவன் சுத்தமாக்கினவைகளை நீ தீட்டாக எண்ணுதே'' எந்த மனிதனையும் தீட்டுள்ளவனென்றும் அசுத்தனென்றும் நாம் சொல்லக்கூடாது. இயேசுகிறிஸ்து வின் திருஅவதாரம் எல்லா மானிடரையும் சமமாக்கி விட்டது.

3. புறஜாதியார் 24–48 (புறஜாதியாரின் பெந்தேகோஸ்தே)

இதிலடங்கியுள்ள வரலாற்றை ''புறஜாதியாரின் பெந்தே கோஸ்தே'' என்னலாம். இதை ரூபகாரப்படுத்தப் பேதுரு பிரசங்கிக்கும்போது ''யாவர் மேலும் பரிசுத்த ஆவியானவர் இறங்கினுர்'' என்கிருர். பெந்தேகோஸ்தே நாளில் யூத சபை மேலிறங்கின வண்ணம் இங்கே புறஜாதிகள் மேலிறங்கினுர். உடனே அப்போஸ்தலன் அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்தார். கொர்நேலியுவின் வேண்டுகோளின்படி அவன் வீட்டிலே பேதுரு சிலநாள் தங்கினுர்.

அதிகாரம் 11

புறஜாதியார்

1. செசரியா 1–18

2. அந்தியோகியா 19–26

3. யூதேயா சகோதரருக்கு பஞ்சகால உதவி 27–30.

1. செசரியா 1–18

பேதுரு செசரியாவிலிருந்து எருசலேம் திரும்பினபோது எருசலேமிலுள்ள சபையார் பேதுரு செசரியாவில் செய்த ஊழியத்தைக் குறித்து ஆட்சேபித்தார்கள். ஆனுல் பேதுரு பரிசுத்த ஆவியால் நடத்தப்பட்டதை விவரித்துக் கூறின போது புதுச்சபையாரை ஏற்றுக் கொண்டார்கள்.

2. அந்தியோகியா சபை 19–25

ஸ்தேவான் நிமித்தமாக நேரிட்ட உபவத்திரவத்தின் பலனுக சமாரியரும் (மாய வித்தைக் காரனுன சீமோன்) யூத மார்க்கத்தமைந்த எத்தியோப்பியனும் தேவபக்தியுள்ள ஒரு புறஜாதியானும் (அந்த வீட்டில் கூடினவர்கள்) பின்பு அந்தியோகியாவிலுள்ள கிரேக்கரும் திருச்சபையில் சேர்க்கப் பட்டார்கள்.

அந்தியோகியா

ரோம ராஜ்ஜியத்திலே முதலாவது ரோமும் இரண்டாவது அலெக்சாந்திரியாவும் மூன்ருவது அந்தியோகியாவும் முக்கிய பட்டணங்கள். இதுவே தலைநகர். ஏறக்குறைய கி. மு. 300 வருஷத்தில் செலுகஸ் நிகாட்டர் என்ற கிரேக்க அரசனுல் தன் தகப்பன் அந்தியோகுக்கு ஞாபகச் சின்னமாகக் கட்டப்பட்டது. இங்குச் சீரியர், கிரேக்கர், ரோமர், யூதர் திரள் திரளாயிருந்தனர். இங்குக் கிரேக்க, லத்தீன், கல்வியும், நாகரீகமும் நிறைந்திருந்தது. அலங்கார வீதிகள் கட்டடங்களுண்டு. ரோமை அதிகாரிகள் மிகுந்த இடம். உல்லாசமும் துன்மார்க்கமும் நிறைந்த இடம். ரோமாபுரியின் துன்மார்க்கத்தை வர்ணித்த சரித்திரக் காரன், ''சீரியா அந்தியோகியா, ரோமாபுரிக்கு வந்து விட்டதோ?'' என்கிருர்.

இப்பேர்ப்பட்ட நகரத்தைக் கர்த்தர் தெரிந்து கொண்டு அதிலே புறஜாதியாரின் சபைகளுக்கெல்லாம் தாய்சபையாய் இருக்க ஒரு சபையை ஸ்தாபித்தார். இச்சபையிலிருந்து பல கிறிஸ்தவ மகான்கள் தோன்றினுர்கள். 1. இரத்த சாட்சியாய் மரித்த இக்னேஷியஸ் அத்தியட்சர். 2. பிரபல வித்வானுன ஜூலியஸ் 3. கிறிஸ்து சபை நிர்ணய சாஸ்திரியான தேயோப்பிலு 4. பொன்வாயன் எனப்பெயர் பெற்ற சாதுரிய பிரசங்கியான கிறிஸ்சாஸ்தம் 5. வேத சாஸ்திரத்தில் வல்லவரான டோரஸ் இந்நகரத்தார்களே.

அந்தியோகியா சபையின் நற்காரியங்கள்

1. சர்வ ஜனுபிமானமுள்ள சபை
2. வளரும் சபை
3. சுவிசேஷ போதனை நிறைத்த சபை
4. சாட்சி கொடுக்கும் சபை
5. உதாரத்துவம் நிறைந்த சபை
6. மனதாரக் கீழ்ப்படியும் சபை.

1. சர்வ ஜனுபிமானமுள்ள சபை

சீரியர், கிரேக்கர், யூதர், ரோமர் மற்றும் பல ஜாதிகளுள்ள நகராதலால் பல ஜாதியாரும் சபையிலிருந்தார்கள். அங்கே ஜாதி வித்தியாசமில்லை, யாவரும் ரட்சிப்படைய வேண்டுமென்ற சுவிசேஷ வாஞ்சை இருந்தது.

2. வளரும் சபை

அநேகர் விசுவாசித்து கர்த்தரிடத்தில் திரும்பினார்கள். கர்த்தருடைய வல்லமை அங்கிருந்தது. குணப்படுதல், நிலை நிற்றல், ஓயாவளர்ச்சி இம்மூன்றுமே தனி ஜீவியத்திலும் சபை ஜீவியத்திலும் சுகமான நிலைமை.

3. சுவிசேஷ போதனை நிறைந்த சபை

வேத அறிவும் சுவிசேஷமும் கவனமாய்ப் போதிக்கப் பட்ட சபை. எருசலேம் சபையார் பர்னபாவை இங்கு அனுப்பினார்கள் *(22,23)* சவுலும் பர்னபாவும் அங்கே ஒரு வருஷம் தங்கியிருந்து உபதேசித்தார்கள் *(25, 26)* மார்க்க அஸ்திபாரம் போடப்பட்ட சபை. வேத அறிவு மிஷனெரி வைராக்கியத்தை மூட்டி விடும்''.

4. சாட்சி கொடுக்கும் சபை

அறிவில் மாத்திரமல்ல நடக்கையிலும் நற்சாட்சி பெற்ற சபை. கிறிஸ்தவர்கள் என்ற பெயர் முதல்முறை அந்தி யோகியாவிலே சீஷர்களுக்கு வழங்கினது.

5. உதாரத்துவம் நிறைந்த சபை

எருசலேமில் பஞ்சம் வந்தபோது உதாரத்வமாய்ப் பணம் கொடுக்கத் தீர்மானித்தார்கள். *(29–30)* ஜாதி பேத மின்றி (புறஜாதியார்–யூதேயா–எபிரேய கிறிஸ்தவர்கள்) பொருள் சகாயம் செய்தார்கள்.

6. மனதாரக் கீழ்ப்படியும் சபை

கடவுள் சித்தம் செய்ய உறுதியாய் ஆயத்தப்பட்ட சபை. ஜெபத்தோடும் உபவாசத்தோடும் காத்திருந்ததால் கர்த்த ருடைய சித்தம் வெளிப்படுத்தப்பட்டது. இங்கிருந்துதான் மிஷனெரிப் பிரயாணம் ஆரம்பித்தது. இச்சபையின் கீழ்ப் படிதல் முக்கியமானது. கடவுள் சித்தம் கொண்ட போது மிஷனெரிப் பிரயாணத்திற்குப் பவுலையும் பர்னபாவையும் முறுமுறுக்காமல் உடனே அனுப்பினார்கள்.

கிலவுதியுராயன் கி. பி. 41–54. கி. பி. 44–45இல் பெரிய பஞ்சம் உண்டாயிற்று. அகபு தீர்க்கதரிசி கி. பி. 43இல் தீர்க்க தரிசனம் உரைத்தான்.

மூப்பர் (பிரஸ்பிட்டர்)

*14:23*இல் சொல்லப்பட்டவாறு இவர்களே சபையை நடத்தினவர்கள். இவர்களே *20:28*இல், பிலி. *1:1*இல் பிஷப் (கண்காணிகள்) என்றழைக்கப்பட்டார்கள். பிரஸ்பிட்டர் அல்லது மூப்பர் என்பார் டீக்கன்மாரைக் காட்டிலும் உயர்ந்த அந்தஸ்துள்ளவர்களும், அப்போஸ்தலருக்குச் சிறிதே தாழ்ந்த அந்தஸ்துள்ளவர்களுமாயிருந்தார்கள். யாக். 5:14இல் இவர்கள் ஊழியத்தைப்பற்றிச் சொல்லி யிருக்கிறது.

டீக்கன்மார் உத்தியோகம் (6ஆம் அதிகாரம்) மூப்பர் உத்தியோகத்திற்குச் சற்றுக் குறைந்தது,

அதிகாரம் 12

ஏரோது (அகிரிப்பா I)

1. பேதுரு சிறைச்சாலையிலடைக்கப்பட்டது 1–10
2. பேதுரு தேவதூதனால் விடுதலையாக்கப்பட்டது 11–19
3. ஏரோதின் மரணம் 20–24.

1. பேதுரு சிறைச்சாலையிலடைக்கப்பட்டது 1–10.

கிறிஸ்தவச் சபையை முதல் துன்பப்படுத்தினவர்கள் சதுசேயரும், பிரதான ஆசாரியருமே (4:1; 5:17). பின்பு துன்பப்படுத்தினவர்கள் பரிசேயர் மற்றோர் (6:11–14). இந்தச் சமயத்தில் யூதருடைய ராஜாவாகிய ஏரோதும் சேர்ந்து துன்பப்படுத்துகிறான் (12:1–4).

ரோமை துரைத்தனத்தார் இன்னும் கொஞ்ச காலத்திற்குப் பிறகு துன்பப்படுத்தத் துவங்கினார்கள்.

ஏரோது ராஜா

இது பெரிய ஏரோதுவின் பேரனான ஏரோது அகிரிப்பாவைக் குறிக்கும். அரிஸ்தாபுலஸ் பொரிக்கோயாள் என்பாரின் குமாரன். இவன் ரோமாபுரியில் வளர்ந்து, திராக்கொனித்தி நாட்டுக் கதிபதியாயிருந்து பின்பு, கலிகுலா, கிலவுதியா என்னும் அரசர் அபிமானத்தால் தன் பாட்டன் ஆண்ட பலஸ்தீனா தேச முழுவதற்கும் இராஜனானான். ரோம அரசாங்கத்தார் தயவை நாடுவதும், யூதரைப் பிரியப்படுத்துவதுமே இவன் முக்கிய அரசுமுறை. கி. பி. 44இல் இவன் மிகப் பரிதாபமாக மரித்தான்.

யாக்கோபு

செபதேயுவின் குமாரன். யோவானின் சகோதரன். அப்போஸ்தலரில் முக்கியமான மூன்றுபேரில் ஒருவர். அப்போஸ்தலரில் இவரே முதல் முதல் ரத்தசாட்சியாய் மரித்தவர். இவர் சகோதரர் யோவான். இவர்களெல்லாரிலும் கடைசியாய் மரித்தார். இயேசு தீர்க்கதரிசனமாய்ச் சொன்ன மரணம் யாக்கோபுக்குச் சம்பவித்தது (மத். 20:23).

வகுப்புக்கு நான்கு போர்ச்சேவகராக நான்கு வகுப்புகள்

பதினாறு பேர். ஒவ்வொரு வகுப்பாரும் 3 மணி நேரம் காவல் செய்வார்கள். இரண்டு வகுப்பார் முதலாம், இரண்டாம் வாசலையும், இரண்டு வகுப்பார் கைதிக்குக் காவலாயுமிருப்பார்கள்.

ஜெபம் பண்ணினார்கள்

பேதுருவுக்காக இரவெல்லாம் ஜெபித்தார்கள். யாக். 5:16 ஜெபத்தினால் அற்புதமாக விடுதலை கிடைத்தது.

2. பேதுருவின் விடுதலை 11–19

கர்த்தருடைய தூதன் (இரண்டுவித தூதன்) பரலோகத்தின் தூதன் விடுதலை செய்ய வந்தான்.

அவருடைய தூதன்

ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு தூதன் இருப்பதாக யூதர் நம்பினர், அதன்படி பேதுருவைக் காக்கும் தூதன் பேதுருவின் மரணத்திற்குப் பின் அவர் ரூபமாய் வந்திருப்பான் என்றெண்ணினர்.

1. யாக்கோபு தன் மரணத்தால் கர்த்தரை மகிமைப்படுத்தினார் (இரத்தசாட்சிகளின் ரத்தம் திருச்சபையின் வித்து).

2. பேதுரு இன்னும் இருபது வருஷம் தன் ஜீவியத்தினால் கர்த்தருக்கு ஊழியஞ் செய்து அவரை மகிமைப்படுத்தினார்.

3. நம் ஜீவியத்தில் கர்த்தரை மகிமைப்படுத்த அவர் நமக்கேற்படுத்திய ஒழுங்கு அல்லது வழி என்ன? நம்மைப் பற்றி அவர் கவலையாயிருக்கிருர் (பிலி. 1:20—26).

3. ஏரோதின் மரணம் 20—24

ஒரு நாட்டினர் தங்களைச் சுற்றி இருக்கும் நாட்டின ரோடு நட்புக்கொள்வது இயல்பு. ஏரோது ராஜனைக் கைவசப் படுத்தத் தீரியரும், சீதோனியரும் முகஸ்துதி பேசினர். 'இது வரையிலும் உம்மை மறுபிறவி என்று வணங்கின நாங்கள் இதுமுதல் உம்மை தெய்வப்பிறவியென்று உமது திருவடி தொழுவோம்'' என்றதாக ஜொசிபஸ் எழுதியிருக் கிருன். ஏரோது துணிகரப் பாவத்தால் புழுபுழுத்துச் செத்தான்.

ஜொசிபஸ் நூலின்படி

சீதோனியருக்குப் பிரசங்கிக்க ஏரோது வெள்ளி சரிகை இழைத்த அங்கியோடு, சூரியோதய நேரத்தில் பிரகாசமாய் சிம்மாசனமேறினன். தன்னை மெச்சின போதவன் அவர்களைக் கண்டிக்கவில்லை. அவனுக்கோர் கொடிய வயிற்றுவலி உடனே துவங்கிற்று. ஐந்து நாள் மிக கஷ்டப்பட்டு நிர்ப்பாக்கியமாய் மரித்தான்.

தேவ வசனம் வளர்ந்து பெருகிற்று

துன்பம் மேலிட்டாலும், பேதுருவின் அற்புத விடுதலை யும், ஏரோதின் சடுதி மரணமும் சபையின் விருத்திக்குக் காரணமாயின.

குறிப்பு

1. இதுவரை எருசலேமிலிருந்து சுவிசேஷம் சென்றதை பார்த்தோம். இனிமேல் அந்தியோகியாவிலிருந்து ரோமா புரிக்குச் சுவிசேஷம் சென்றதைப் பார்ப்போம்.

2. 13—28. இதுவரை முக்கிய அப்போஸ்தலன் பேதுரு இனிமேல் முக்கிய அப்போஸ்தலன் பவுல்.

3. இதுவரை யூதருக்கும், யூதமார்க்கத்தமைந்த புற ஜாதியாருக்கும் சுவிசேஷம் கூறப்பட்டது. இனி யூத மார்க்கத்தில் சேராத புறஜாதியாரான விக்ரகாராதனைக் காரருக்குக் கூறப்படுகிறதைப் பார்ப்போம். இம்மட்டும் சுவிசேஷ விருத்தி உள் நாட்டில் நடந்தது. இனிமேல் புறதேச மிஷனெரி வேலையைப் பற்றிப் பார்ப்போம்.

இரண்டாம் பாகம் 13–28 அதிகாரங்கள்

முகவுரை

அப்போஸ்தலர் நடபடிகளை இரண்டு பாகமாக பிரிக்கலாம்.

1. எருசலேமிலிருந்து சுவிசேஷம் யூதேயா சமாரியா நாடுகளுக்குச் சென்ற விபரம்.

2. அந்தியோகியாவிலிருந்து ரோமாபுரி வரைக்கும் சுவிசேஷம் சென்ற விபரம்.

பூமியின் கடைசி பரியந்தமும் சாட்சிகளாயிருப்பீர்க ளென்ற தீர்க்கதரிசனம் (அதி. 13—28) முடிய நிறைவேறக் காண்கிறோம்.

இரண்டு பாகங்களுக்குள்ள வித்தியாசம்

1. அதி. 1–12—முன் நின்ற அப்போஸ்தலன்—பேதுரு
13–28—முக்கிய ஊழியன்—பவுல்

2. அதி. 1–12—யூதருக்கும் யூதமார்க்கத்தமைந்தவர் களுக்கும் சுவிசேஷம் கூறப்பட்டது
அதி. 13–28—புறஜாதியாரான அஞ்ஞானிகளுக்கு சுவிசேஷம் கூறப்பட்டது

3. அதி. 1–12—உள்நாட்டு வேலை
13–28—புறதேச மிஷனெரி வேலை

4. அதி. 1–12—எருசலேமிலிருந்து சுவிசேஷம் சென்றது
13–28—அந்தியோகியாவிலிருந்து சென்றது.

13–28 அதிகாரங்களில் பவுல் அப்போஸ்தலனின் ஊழியத்தையே சொல்லியிருக்கிறது. இதை முதலாம் பிரயாணம், இரண்டாம் பிரயாணம், மூன்றும் பிரயாணம், ரோமாபுரிப் பிரயாணம் என்று நான்கு பங்காக பிரித்திருக்கிறது. இந்தப் பிரயாணங்களில் 6 மாகாணங்களில் சுவிசேஷ ஊழியம் செய்திருக்கிறதைக் காணலாம்.

1. சீப்புரு மாகாணம் —13:4 —13:12 வரை
2. கலாத்தியா மாகாணம் —13:13—16:4 வரை
3. மக்கெதோனியா மாகாணம்—16:5 —17:15 வரை
4. அகாயா மாகாணம் —17:16—18:17 வரை
5. ஆசியா மாகாணம் —18:18—19:20 வரை
6. இத்தாலியா மாகாணம் —19:21—28:31 வரை

I பிரயாணத்தில்		—சீப்புரு, கலாத்தியா மாகாணங்கள்.
II	,,	—மக்கெதோனியா, அகாயா மாகாணங்கள்
III	,,	—ஆசியா மாகாணத்தில்...
IV	,,	—இத்தாலிய ,,

அதிகாரம் 13

சீரியா அந்தியோகியா

1. சீரியா அந்தியோகியா—1–3
2. சீப்புரு தீவு—4–12
3. பிசிதியா அந்தியோகியா—13–41
4. அந்தியோகியா ஊழியத்தின் பலன்—42–52.

1. சீரியா அந்தியோகியா 1–3 (பவுல் பர்னபா பிரத்தியோகம்)

புறதேச மிஷன்வேலை செய்ய மிஷனெரிகளை அனுப்பினது அந்தியோகியா சபையே. பற்பல நிலைமையும் ஜாதியும் உள்ளவர்கள் ஐக்கியமாய் உபவாசத்திலும் ஜெபத்திலும் ஆராதித்துக் கொண்டிருக்கும்போது பர்னபாவையும் சவுலையும் 'பிரித்துவிடும்படி' அழைப்பு வந்தது.

2. சீப்புரு தீவு 4–12 (ஒரு கொடும் விரோதி)

பர்னபாவும், சவுலும், யோவானும், மாற்கும் மிஷனெரி யாத்திரை செய்யும்படி அனுப்பப்பட்டார்கள். 16 மைலுக் கப்பாலிருந்த செலூக்கியா துறையில் கப்பலேறி 60 மைலுக் கப்பாலுள்ளதும், பர்னபாவின் சொந்த இடமுமாகிய சீப்புரு தீவுக்கு வந்தார்கள். கீழ்க்கரையில் சாலமி பட்டணத்தில் அநேக யூதர் வசித்திருந்தனர். அவர்கள் ஜெப ஆலயங்களில் பிரசங்கித்து, பின்பு அத்தீவு முழுவதையும் உருவ நடந்து சுமார் 100 மைல் பிரயாணம் செய்து மேல்கரையிலுள்ள பாப்போ என்ற தலைநகர் சேர்ந்தார்கள். அங்கே செர்கியு பவுல் தேசாதிபதி—மார்க்காபிமானியாதலால் சுவிசேஷத்தை வாஞ்சையோடு கேட்டான். பர்யேசு மாயவித்தைக்காரன்.

செர்கியு பவுலைத் தன் கையிலடக்கி, கெடுக்கப்பார்த்த போது பவுலின் கடிந்துகொள்ளலால் குருடனுஞன். இவ் வதிசயத்தைக் கண்டு செர்கியு பவுல் விசுவாசித்தான்.

சவுல்—யூதப் பெயர்	}	இது முதல் பவுல் என்ற
பவுல்—ரோமப் பெயர்		பேரை அப்போஸ்தலன் எடுத்துக்கொண்டார்.

3. பிசிதியா அந்தியோகியா 13–41

சீப்புரு தீவை விட்டு 150 மைல் தூரம் கப்பல் பிரயாணம் செய்து ரோம ராஜ்யத்தைச் சேர்ந்த பம்பிலியா மாகாணத்தின் பெர்கே பட்டணம் சேர்ந்தார்கள். இங்கே மாற்கும் யோவானும் திரும்பிப் போனுர்கள். 110 மைல் கஷ்டப் பிரயாணத்திற்குப் பின் பவுலும் பர்னபாவும் பிசிதியா மாகாண தலைநகராகிய அந்தியோகியா வந்தார்கள். இங்கே கிரேக்கரும், ரோமரும், வர்த்தகரான யூதரும், சுதேசிகளாகிய பிரிகியரும் திரளாயிருந்தனர்.

பவுல் பிரசங்கம் (16–41)

சாதாரண யூதருக்கு மாதிரிப் பிரசங்கம்

முக்கியப் பிரிவுகள் 3.

1. ரட்சகர் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருந்தார் (முகவுரை)

யூதரைத் தம் ஜனமாகப் பாவித்து ஆசீர்வதித்தார் (16–25).

2. ரட்சகர் வந்தாயிற்று (சுவிசேஷம்)

அவரை அவமதித்துத் தள்ளியும் தீர்க்கருரைப்படி உயிரோடெழுந்தார் (26–37).

3. ரட்சகரை விசுவாசியுங்கள் (அழைத்தல்)

விசுவாசிகளுக்கு இன்பமும், அவிசுவாசிகளுக்குத் துன்பமுமுண்டாகும் (38–41).

பிசிதியா அந்தியோகியாவின் ஊழியத்தின் பலன் 42–82

1. அந்த மாகாணமெங்கும் வசனம் பிரசித்தமாயிற்று—49.

2. புறஜாதியார் வசனத்தை ஏற்றுக்கொண்டார்கள்—48.

3. யூதருடைய ஜாதிப் பொருமையும், மதப் பெருமையும் அதிகரித்தன—50.

அதிகாரம் 14

லீஸ்திரா

1. இக்கோனியா 1–7
2. லீஸ்திரா 8–20
3. தெர்பை 21–23
4. சீரிய அந்தியோகியா 24–28.

1. இக்கோனியாவின் ஆத்திரகுணமுள்ள ஜனங்கள் 1–7

அங்கிருந்து எண்பது மைலுக்கப்பாலிருந்த இக்கோனியாவிற்கு வந்தார்கள். இங்கு யூதர், சுதேசப் பிரிகியரிருந்தார்கள். துவக்கத்தில் ஆத்திரமாய்க் கேட்டு, பின்பு யூதரின் தூண்டுதலால் துன்பப்படுத்தினர்கள். என்ருலும் அப்போஸ்தலர் 'அதிக நாள்' அங்கிருந்து அற்புதங்கள் அடையாளங்களினல் அநேகரைத் திருப்பினர்கள். தெக்லா என்னும் இப்பட்டணத்தின் ஒரு பெண் கிறிஸ்தவளாகிப் பல பாடுகளைச் சகித்ததாக ஒரு பாரம்பரியக் கதையுண்டு. கலகம் அதிகரித்ததால் இக்கோனியாவை விட்டு மறு பட்டணம் சென்றனர்.

2. லீஸ்திரா—வீண்பக்திக்காரர் 8–20

அங்கிருந்து 18 மைலுக்கப்பாலுள்ள லீஸ்திரா வந்தார்கள். இங்கு யூதர் சொற்பம். சுயநாட்டாஞன லிக்கோனியர் உண்டு. ஒரு யூத விதவை தன் தாயோடும் தீமோத்தேயு என்னும் மகனேடும் இங்கு வசித்தார்கள். இவ்வீட்டார் விசுவாசிகளானர்கள். பிறவிச் சப்பாணி சுகப்பட்டான். தங்களை யூபித்தர் என்றும், மெர்கூரி என்றும் அவ்வூரார் பாவித்ததால் சுவிசேஷகர் கண்டித்தனர். கலகம் ஏற்பட்டது. அதன்பின் கல்லெறிந்து மரித்துப்போனன் என்று பட்டணத்திற்கு வெளியே தள்ளினர். பவுல் மூர்ச்சை தெளிந்தெழுந்து முப்பது மைலுக்கப்பாலுள்ள தெர்பை சென்றார்.

3. தெர்பை—அமைதலான ஜனங்கள் 21–23

அநேகரைச் சீஷராக்கினர்கள். இவர்களில் காயு ஒருவன்.

4. சீரியா அந்தியோகியாவுக்குத் திரும்பினது 24–28

சுமார் 2 வருஷம் சுவிசேஷ வேலை செய்து, முதலாம் பிரயாணத்தை முடித்துப் பவுலும் பர்னபாவும் தாய்ச் சபை திரும்பிக் கர்த்தர் தங்கள் மூலமாய்ச் செய்த கிரியைகளைச் சபையாருக்கு அறிவித்தார்கள்.

1. பிரயாணம் கி. பி. 47–49

முதல் பிரயாணத்தில் சந்தித்த இடங்கள்

1. சீப்புரு தீவு—செர்கியு பவுல்
2. பெர்கே—யோவான் மாற்கு திரும்பிப் போதல்
3. அந்தியோகியா—யூதருக்குப் பிரசங்கம்
4. இக்கோனியா—ஆத்திர ஜனங்கள்—தெக்லா
5. லீஸ்திரா—வீண்பக்திக்காரர்—பிறவிச் சப்பாணி—தீமோத்தேயு, அவர் தாயார், பாட்டி
6. தெர்பை—அநேக சீஷர்—காயு.

காயு

1. பவுல் ஞானஸ்நானம் கொடுத்த ஒரு கிறிஸ்தவன் அப். 20:4; ரோ. 16:23; 1 கொ. 1:5.

2 மக்கதோனியாவிலிருந்து வந்த காயு அப். 19:29.

3. யோவான் சொன்ன காயு 3 யோ. 1:1.

அதிகாரம் 15

எருசலேம் சங்கம்

1. விருத்தசேதனத்தைப் பற்றிய தர்க்கம் 1—5
2. பேதுருவின் பிரசங்கம் 6—12
3. யாக்கோபினுடைய பிரசங்கம் 13—21
4. அப்போஸ்தலர் தீர்மானம் 22—29
5. இரண்டாம் பிரயாண ஆயத்தம் 30—41.

விருத்தசேதனத்தைப் பற்றிய தர்க்கம் 1—5

யூதர் புறஜாதியார் விருத்தசேதனம் பெறுததைப்பற்றி கண்டித்துப் போதித்ததைப்பற்றி சீரிய அந்தியோகியா சபையில் வாக்குவாதமுண்டானதால், இதைக் குறித்து அப்போஸ்தலர் அபிப்பிராயத்தை அறியும்படி பவுலும் பர்னபாவும் எருசலேமுக்கு அனுப்பப்பட்டார்கள். அவர்கள் போய் 'புறஜாதியார் மனந்திரும்பின செய்தியை அறிவித்து சகோதரர் எல்லாருக்கும் மிகவும் சந்தோஷத்தை உண்டாக்கினர்கள்' வச. 3.

2. பேதுருவின் பிரசங்கம் 6—12

விருத்தசேதன விஷயத்தை விசாரிக்கச் சங்கம் கூடின போது, பேதுரு எழுந்து மூன்று முக்கிய விஷயங்களைச் சொன்னர்.

1. செசரியாவிலுள்ள புறஜாதியாருக்குக் கடவுள் சுவிசேஷத்தை ஏற்கெனவே தந்தருளினர் 7.

2. நமக்குப் பரிசுத்த ஆவியை தந்தருளினதுபோல அவர்களுக்கும் தந்தருளினர் 8.

3. நமக்கும் அவர்களுக்கும் வித்தியாசமில்லாமல் நம்மை நடத்துகிறர் 9.

3. யாக்கோபின் பிரசங்கம் 13—21

யாக்கோபு பேதுருவுக்குச் சார்பாக:

1. கொர்நேலியுவின் குணப்படுதல், தேவ நியமனம் 14

2. தீர்க்கதரிசனம் இதற்கிசைந்திருக்கிறது 15—21.

4. அப்போஸ்தலர் தீர்மானம் 22—29

1. விக்கிரகங்களுக்குப் படைத்ததைச் சாப்பிடலாகாது (1 கொ. 8:10).

2. வேசித்தனத்துக்கு விலகவேண்டும்.

3. ரத்தம் போக்காத மாமிசத்தை சாப்பிடலாகாது (லேவி. 17:12).

4. நொறுங்குண்டதைச் சாப்பிடலாகாது.

5. இரண்டாம் பிரயாண ஆயத்தம் 30—41

இந்தத் தீர்மானம் மறுபடியும் புறஜாதியாரிடம் போய்ச் சுவிசேஷத்தைக் கூற ஏவிவிட்டது, அந்தியோகியா சபை வளர்ந்து விசாலித்தது. மாற்கினல் உண்டான மனஸ்தாபத்தால் பவுலும் சீலாவும் ஒரு பக்கமும், பர்னபாவும் மாற்கும் இன்னெரு பக்கமும் பிரயாணம் போகவேண்டியதாயிற்று.

அதிகாரம் 16

பிலிப்பி

1. சின்ன ஆசியாவில் ஊழியம் 1–10

2. ஐரோப்பாவில் ஊழியம் 11–15

3. சிறைச்சாலைச் சம்பவம் 16–40

1. சின்ன ஆசியாவில் ஊழியம் 1–10

முதலாவது சீரியா, சிலிசியா நாடுகளுக்கும், பின்பு தெர்பை, லீஸ்திரா பட்டணங்களுக்குஞ் சென்று தான் முன் ஸ்தாபித்த சபைகளுக்குப் போய், எருசலேம் சங்க தீர்ப்பைக் கூறினர். தம் ஊழியத்தில் தீமோத்தேயுவையும் கூட்டிக் கொண்டார். பின்பு எபேசு திசையாய்ப் போக எத்தனிக்கை யில் ஆவியானவரால் தடை செய்யப்பட்டார்.

'எங்களுக்கு உதவி செய்யவேண்டும்' (இந்திய கிறிஸ்தவர் களின் அபயமும் இதுவே).

ஐரோப்பா கண்டத்திற்குக் கடவுள் பவுலை வழி நடத் தினர். கற்றவராகிய பவுல் பர்னபா போன்ரேர் தங்களைப் பிரதிஷ்டை செய்தால் நம் தேசத் தேவை நீங்கும்.

'நாங்கள்' வ. 10

லூக்கா சுவிசேஷகன் துரோவா பட்டணத்தில் பவுலோடு கூடிக்கொண்டான்.

2. ஐரோப்பாவில் ஊழியம் 11–15

துரோவா பட்டணத்திலிருந்து பிலிப்பி பட்டணத்திற்கு வந்தார்கள். மகா அலெக்சாந்தருடைய தகப்பன் பிலிப்பு கட்டின நகர். அநேக யூதர் அங்கிருந்தும் ஜெபாலயங்கள் சொற்பமே. அதைரியமுண்டாகத்தக்கதாக ஒரே ஸ்திரீ

மாத்திரம் விசுவாசியானுள். பிலிப்பு சபைக்கே பவுல் தன் 'சந்தோஷ நிருபத்தை' எழுதினுன்.

குறி சொன்ன அடிமைப் பெண்ணுடைய ஆவியைத் துரத்தினதால் பட்டணத்தில் கலகமுண்டாகிப் பவுலும் சீலாவும் சிறைச்சாலையிலடைக்கப்பட்டார்கள்.

3. சிறைச்சாலைச் சம்பவம் 16–40

பவுலும் சீலாவும் 'கலகக்காரர்' எனக் குற்றம் சாட்டப் பட்டு, அதிகாரிகளிடம் ஒப்புவிக்கப்பட்டார்கள். இவர்கள் பின்பு ரோமை சிலாக்கியத்தை எடுத்துக்கூறி அவர்களைப் பயமுறுத்தினர்.

25 வ. பசியோடும், கழுவப்படாத இரத்தமயமான காயங்களோடும், தொழுமரத்தில் மாட்டப்பட்டிருந்த மனுஷர் பாடுவதின் ரகசியம் என்ன? அதிகாரிகளும் ஜனங் களும் இவர்களுக்கு விரோதம். மகா அதைரியத்தை உண்டு பண்ணத்தக்க பயங்கரமான சமயங்களிலும் இவர்களைப் போல விசுவாச உறுதி காட்டக்கூடுமோ?

அதிகாரம் 17

அத்தேனே

1. தெசலோனிக்கே—1–9

2. பெரோயா—10–15

3. அத்தேனே—16–34.

1. தெசலோனிக்கே 1–9

பவுலும் சீலாவும் தீமோத்தேயுவும் பிலிப்பி பட்டணத்தி லிருந்து 100 மைலுக்கப்பாலுள்ள அம்பிப்போலி, அப்ப லோனியா பட்டணங்களில் ஓரோர் இரவு தங்கி தெச லோனிக்கே பட்டணம் வந்தார்கள். இப்பட்டணம் மக்க தோனியாவின் தலைநகராயும், முக்கிய துறைமுகமாயும், பெரிய வியாபார ஸ்தலமாயுமிருந்தது. மூன்று ஓய்வு நாட் களில் ஜெப ஆலயத்தில் பிரசங்கித்தார்கள். அநேகர் விசுவாசித்தார்கள். ஆனால் யூதர் கலகத்தை எழுப்பியதால் யாசோன் அவர்களுக்கு ஜாமீனாக நின்று, அவர்களை அனுப்பி விட்டான்.

2. பெரோயா 10–15

பெரோயா தெசலோனிக்கேயாவுக்கு 50 மைல் தென் மேற்கேயுள்ளது (இவர்கள் தினமும் வேதத்தை ஆராய்ந் தார்கள். பழைய பிடிவாதங்களுக்கு இடங்கொடாமல் அநேகர் சற்குருவிடம் சரணடைந்தார்கள். யூதரது கலகத் தால் பவுல் தனியே அத்தேனே போகவேண்டியதாயிற்று. சீலாவும், தீமோத்தேயுவும் அங்கே தங்கினார்கள்.

3. அத்தேனே 16–34

பூர்வத்தில் வித்தை, பிரசங்க வல்லமை, தத்துவ சாஸ் திரம் இவைகளுக்கு உறைவிடமானது அத்தேனே பட்டணம்.

இங்கு இரண்டு மார்கானுசாரிகளிருந்தார்கள். 1. எப்பிக் கூரர். 2. ஸ்தோயிக்கர்.

எப்பிக்கூரர்

கி. மு. 341–270 வரை அத்தேனே பட்டணத்தில் வசித்த ஒரு கிரேக்கத் தத்துவ சாஸ்திரி. இவரது கொள்கை களாவன:

1. உலகம் கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டு, பரிபாலிக்கப் பட்டு வரவில்லை.

2. உலகமும் மனிதனும் தற்செயலாய் அணுக்கள் சேர்ந்ததால் உண்டானவர்கள்.

3. இன்பமே ஜீவிய நோக்கம். பயம், துக்கம், நோவு இவைகளைப் பெரிதாகப் பாவிக்காமல் மனரம்மியத்தையே நாடவேண்டும்.

4. மரணத்தில் மனிதனுக்கு உணர்ச்சி இல்லை. மரணத் திற்குப் பின் ஆவியின் நிலைமையைப்பற்றி ஒன்றும் தெரியாது.

5. தேவன் இல்லை என்று சொல்லாவிட்டாலும் நாஸ்திகமே இவர்கள் கொள்கை.

ஸ்தோயிக்கர்

இக்கொள்கையை முதலாவது போதித்த சேனோ (கி. மு. 336–264) என்பவன் ஸ்தோவா என்னும் மண்டபத்தில் முதலாவது போதித்ததால். இந்தக் கொள்கைக்காரருக்கு ஸ்தோயிக்கர் என்ற பெயர் வந்தது.

1. கடவுள் உண்டு. அவர் சகலத்தையும் அளாவி நிற் கிறார் (வேதாந்திகளைப்போல்=சர்வமும் பிரமம்).

2. புத்தியையும் சன்மார்க்கத்தையும் அடைவதும் அவற்றிற்கு இணங்கி நடப்பதுமே ஜீவிய நாட்டம்.

3. மனிதனுக்கு நோய் போன்றவை உணர்ச்சி, இரக்கம், பரிதாபம் இவைகளை மேற்கொள்ள வேண்டும்.

4. நித்தியம் உண்டு. ஆனால் அதைப்பற்றித் தெரியாது.

5. மனிதன் சுயாதீனனாயிருந்தாலும், அவனை ஆளும் ஒரு பிரமாணம் உண்டு.

அத்தேனே பிரசங்க சாரம்

1. பல தேவர்களுண்டு என்று எண்ணின சாதாரண ஜனங்களுக்கு 'அறியப்படாத தேவன்' ஒருவன் உண்டு என்று கூறுகிறார் பவுல் (23).

2. சகலமும் தற்செயலாய் உண்டானதென்று எண்ணின எப்பிக்கூரருக்கு விரோதமாய்ச் சகலமும் தேவனால் உண் டானதென்றும், அவரே சகலத்தையும் நடத்துகிறாரென்றும் போதித்தார்.

3. தாங்களே உயர்ந்தோரென்றெண்ணிய ஸ்தோயிக் கருக்கு விரோதமாய் சகலரும் ஒரே ரத்தத்தில் தோன்றினோ ரென்றும் கடைசி நாளில் கடவுள் முன் யாவரும் கணக்குக் கொடுக்க வேண்டும் என்றும் கூறினார்.

வாயாடி—ஒழுங்கான கல்விப் பயிற்சியில்லாமல் சில நூல் களையும் சில சுலோகங்களையும் மட்டும் கற்று, அறிவாளிகளைப் போல் நடிப்போரை அத்தேனர் இவ்வாறு பகடி செய்வது வழக்கம்.

அதிகாரம் 18

கொரிந்து

1, கொரிந்து பட்டணத்தில் வேலை 1–17

2. சீரியா அந்தியோகியாவுக்குத் திரும்பினது 18–22

3. மூன்றும் பிரயாண ஆயத்தம் 23–28.

1. கொரிந்து பட்டணத்தில் செய்த வேலை 1–17

கல்வித்துறையில் அத்தேனே விசேஷித்ததுபோல் வியா பாரத்தில் கொரிந்து விசேஷித்தது. இப்பட்டணத்தின் இரண்டு பாகங்களிலுள்ள இரு துறைமுகங்கள் மேல், கீழ் கிரேக்க தேசத்தை இணைக்கும் வாசலாயும், ரோமை, கிரேக்கக் கல்வி நாகரீகங்களுக்கு மத்திய ஸ்தானமாயு மிருந்தது. அங்கு ஆடம்பரமும், சிற்றின்பமும் குடிகொண் டிருந்தன. பவுல் சென்ற இடங்களிலெல்லாம் வேலைக்குக் கஷ்டமான இடம் இதுவே. அத்தேனே பட்டணத்தில் அப ஜெயமடைந்த அப்போஸ்தலன், பலவீனத்தோடும், பயத் தோடும் நடுக்கத்தோடும் இங்கு வந்து சிலுவையைக் குறித்தேயன்றி வேறொன்றையும் பிரசங்கியாதிருக்கத் தீர் மானித்தார் (1 கொ. 2:1–5). இங்கிருந்து 1,2 தெசலோனிக் கேயருக்கும், கலாத்தியருக்கும் நிருபம் எழுதினார். இங்கு ஒன்றரை வருஷம் தங்கினார்.

ஆக்கில்லா பிரிஸ்கில்லா

கிறிஸ்தவர்களை ரோம நகரத்திலிருந்து கிலவுதிராயன் துரத்திவிட்டதால், யூத கிறிஸ்தவனான ஆக்கில்லாவும், கிரேக்க கிறிஸ்தவளாகிய அவன் மனைவியும் கொரிந்து பட்டணம் வந்தார்கள். பவுல் இவர்களிடம் தங்கி $1\frac{1}{2}$ வருஷம் ஊழியம் செய்தார். தானும் அவர்களைப்போல் கூடார

வேலை செய்தவனுதலால் சந்தோஷமாய் ஜீவனம் செய்ய ஏது வாயிற்று. சீலாவும், தீமோத்தேயுவும் சீக்கிரமாய் தெசலோனிக்கேயிலிருந்து வந்தார்கள். யூதர் கலகத்தை எழுப்பினபோதிலும் நியாயாதிபதியான கல்லியோனுல் அவர்கள் நியாசனத்தினின்று துரத்தப்பட்டனர். 'இந்தப் பட்டணத்தில் எனக்கு அநேக ஜனங்கள் உண்டு.'

2. சீரியா அந்தியோகியாவுக்குத் திரும்பினது 18—22

கொரிந்தைவிட்டு தாய்ச் சபையாகிய சீரியா, அந்தியோகியா போகப் புறப்பட்டபோது, ஆக்கில்லா, பிரிஸ்கில்லாள் எபேசு செல்லவேண்டியிருந்ததால் பவுலும் அவர்களோடே எபேசு சென்று ஜெப ஆலயத்தில் பிரசங்கித்து, கப்பலேறிச் செசரியா வந்து எருசலேம் சென்று சபையைச் சந்தித்து பின் அந்தியோகியா போனுர்.

இரண்டாம் பிரயாணம் கி. பி. 50—52

சந்தித்த முக்கிய ஸ்தலங்களும் சம்பவங்களும்:

1. தர்சு—பழைய சபையைச் சந்தித்தது.

2. தெர்பை—பழைய சபையைச் சந்தித்தது

3. லீஸ்திரா—பழைய சபையைச் சந்தித்தது (தீமோத்தேயு)

4. இக்கோனியா—பழைய சபையைச் சந்தித்தது

5. பிசிதியா அந்தியோகியா—பழைய சபையைச் சந்தித்தது

6. துரோவா—தரிசனம், லூக்கா

7. பிலிப்பி அ. லீதியாள்—யூதமார்க்கத்தமைந்தவள்
ஆ. குறிசொல்லும் பெண்—கிரேக்கப் பெண்
இ. சிறைச்சாலை—ரோம உத்தியோகஸ்தன்

8. தெசலோனிக்கே—3 ஓய்வுநாள் யாசோன்

9. பெரோயா—வேத ஆராய்ச்சியுள்ள ஜனங்கள்

10. அத்தேனே—எப்பிக்கூரர், ஸ்தோயிக்கர்

11. கொரிந்து—$1\frac{1}{2}$ வருஷ ஊழியம் ஆக்கில்லா, பிரிசில்லா தெசலோனிக்கேயர், கலாத்தியர் நிருபங்கள் எழுதப்பட்டது.

12. எபேசு—ஆக்கில்லா, பிரிஸ்கில்லாவைவிட்டுப் பவுல் பிரிந்தது.

13. சீரியா அந்தியோகியா—திரும்பி வந்தது.

அதிகாரம் 19

எபேசு

1. மூன்றும் பிரயாண ஆரம்பம் எபேசு 1—22

2. தெமேத்திரியுவின் கலகம் 23—41.

1. மூன்றும் பிரயாண ஆரம்பம் 1—22

அப்பெல்லோ

அலெக்சாந்திரியா பட்டணத்தில் பிறந்த யூதன். யோவானது ஞானஸ்நானம் பெற்றவன். வேத சாஸ்திரம் கற்றவன். சாதுரிய வித்தையில் தேறினவன். கிறிஸ்து மார்க்க உயர்ந்த உபதேசங்களையும் ஆவியின் ஞானஸ்நானத்தைக் குறித்தும் அறியாதவன். ஆக்கில்லா, பிரிஸ்கில்லாளாலே போதிக்கப்பட்டு 'கிருபையினாலே விசுவாசிகளானவர்களுக்கு மிகவும் உதவியாயிருந்தான்" அதி. 18:27.

பரிசுத்தாவியானவர் அருளப்பட்ட ஏழு சமயங்கள்

1. இயேசு அபிஷேகம் பண்ணப்பட்டபோது லூ. 3:21

2. அப்போஸ்தலர் மீது அப். 2:4

3. சீஷர் பேதுருவுக்காகவும் யோவானுக்காகவும் ஜெபித்திருக்கும்போது அப். 4:31

4. பேதுரு சமாரியர்மேல் கைகளை வைத்தபோது அப். 8:17

5. அனனியா பவுல்மேல் கைகளை வைத்தபோது அப். 9:17

6. பேதுரு பேசுகையில் புறஜாதியார்மேல் அப். 10:44

7. எபேசு சீஷர்மேல், பவுல் கைகளை வைத்தபோது அப். 19:6.

திறன்னுவுடைய வித்தியாசாலை

பள்ளிக்கூட நேரம் 11 மணிக்கு முடிந்தபிறகு பவுல் அதிலே பிரசங்கித்து வந்தார். இக்காலங்களிலே வெளிப்படுத்தலில் சொல்லியிருக்கும் ஏழு சபைகளும் இன்னும் அநேக சபைகளும் ஸ்தாபிக்கப்பட்டன.

ஸ்கேவா ஆசாரிய வகுப்பைச் சேர்ந்தவன். மந்திரவாதிகளில் ஒருவன். தியானாள் கோவில் பூசாரியாயிருக்கலாம்.

எபேசுவின் கலகம் 23—41

அர்த்தெமிதேவி—தியானாள்.

அதிகாரம் 20

மிலேத்து

1. கிரேக்க தேசத்துச் சபை சந்திப்பு *1–6*.

2. ஐத்திகு உயிரோடெழுப்பப் பட்டது *7–12*.

3. எபேசு மூப்பருக்குச் செய்த பிரசங்கம் *13–38*.

1. கிரேக்க தேசத்துச் சபை சந்திப்பு 1–6

எருசலேமுக்குத் திரும்புமுன், பவுல் தனது இரண்டாம் பிரயாணத்தில் சந்தித்த (பிலிப்பி, தெசலோனிக்கே, பெரோயா, அத்தேனே, கொரிந்து முதலிய) இடங்களில் ஸ்தாபித்த சபைகளைச் சந்தித்தார். சமுத்திர மார்க்கமாய்ப் பிரயாணம் செய்தால் யூதர் தன்னைக் கொன்று போடுவார்களென்றறிந்து பிரயாணத்தை மாற்றித் துரோவாவிலே ஆசியா சபை மூப்பரை சந்திப்பதாக அவர்களுக்குச் செய்தி அனுப்பித் தரைமார்க்கமாய் போனார். போகுமுன், பிலிப்பி பட்டணத்திலிருந்து 2 கொரிந்தியர் நிருபத்தையும், கொரிந்து பட்டணத்திலிருந்து ரோமர் நிருபத்தையும் எழுதினார் (கி. பி. 58).

எருசலேம் போவதின் நோக்கம்

பஸ்காவை ஆசரிக்கவும், ஏழைக் கிறிஸ்தவர்களுக்காகச் சேர்த்த பணத்தைக் கொண்டுபோகவுமே.

எங்களுக்காக வ. 5

துரோவாவிலிருந்து, ஆகம சரித்திரம் முடிய லூக்கா கூடவே இருந்தார்.

2. ஐத்திகு உயிரோடெழுப்பப்பட்டது 7–12

எலியா செய்தது போலும் 1 இரா. *17:21*

எலிசா செய்தது போலும் 2 இரா. *4:35*

பவுலும் மரித்தவன்மேல் விழுந்து உயிரோடெழுப்பினார்.

3. எபேசு மூப்பருக்குச் செய்த பிரசங்கம் 13–38

மித்திலேனே சின்ன ஆசியாவுக்கு மேற்கிலுள்ள லெஸ்பன் தீவின் தலைநகரம்.

கியுதீவு சின்ன ஆசியாவின் மேற்குக் கரையிலிருந்து கொஞ்சம் தூரத்திலிருக்கும் ஒரு தீவு.

சாமுதீவு சின்ன ஆசியாவின் மேற்கெல்லைக்குச் சமீபமாய் இருக்கும் செழிப்பான ஒரு தீவு.

துரோகில்லியோன் சின்ன ஆசியாவின்மேல் கரையிலே எபேசு பட்டணத்திற்குத் தெற்கே இருக்கிற ஒரு முனை.

எபேசு மூப்பருக்குச் செய்த பிரசங்கம் 13–38.

1. அவனுடைய கடந்த கால ஜீவியம் 18–21

a. வெகு மனத்தாழ்மை *19*.

b. மிகுந்த கண்ணீர் *19*.

c. சோதனையில் வெற்றி *19*.

d. வீடுகள்தோறும் பிரசங்கம்.

e. யூதருக்கும் கிரேக்கருக்கும் சாட்சி *21*.

2. அவனுடைய வருங்கால ஜீவியம் 22–24

a. எருசலேமுக்குப் போகிறேன். நேரிடுவதை அறியேன் *22*.

b. கட்டுகளும் உபவத்திரவங்களுமுண்டு *23*.

c. ஒன்றைக் குறித்தும் கவலைப்படேன்; பிராணனையும் அருமையாக எண்ணேன் *24*.

d. ஓட்டத்தை சந்தோஷத்தோடே ஓடி, ஊழியத்தை நிறைவேற்ற விரும்புகிறேன் *24*.

மூப்பரின் கடமைகள் 25—31

a. என் பரிசுத்தத்திற்கு நீங்கள் சாட்சி 26.

b. உங்களைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள் 28.

c. மந்தை முழுவதையுங் குறித்து எச்சரிக்கையாயிருங்
ள் 28.

d. விழித்திருங்கள் 31.

ஆசீர்வாதம் 32—35 வசனம் 32

'வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம்' யேசு இரட்சகர் கூறிய இவ்வார்த்தைகள் சுவிசேஷங்களி ல்லை. என்றாலும் இவை அவர் கூறியவைகளே. இதைப் பான்ற இன்னும் பல வசனங்களை 1892ஆம் வருஷத்தில் கிப்தில் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

ன்றும் பிரயாணம் கி. பி. 53—58

ன்றும் பிரயாணத்தில் சந்தித்த இடங்களும், முக்கிய சம்பவங் களும்

1. எபேசு—3 வருஷம், 1 கொரிந்தியர்; தியானுள் ாவில்

2. பிலிப்பி—2 கொரிந்தியர் நிருபம் எழுதப்பட்டது

3. கொரிந்து—ரோமர் நிருபம் எழுதப்பட்டது

4. துரோவா—ஐத்திகு உயிரோடெழுப்பப்பட்டது

5. மிலேத்து—எபேசு மூப்பருக்குப் பிரசங்கம்.

அதிகாரம் 21

எருசலேம்

1. எருசலேம் பிரயாணம் 1—15

2. எருசலேமில் சபைத் தலைவரைச் சந்தித்தல் 16—26

3. கலகமும் காவலும் 27—40.

1. எருசலேம் பிரயாணம் 1—15

மிலேத்து பட்டணத்திற்கு வந்து, எபேசு சபை மூப்பரை யும், மற்ற சகோதரரையும் விட்டு, கோஸ் தீவையும், ரோது தீவையும் சேர்ந்து, சின்ன ஆசியாவிலுள்ள பத்தாரா துறைமுகமடைந்து, அங்கிருந்து தீரு பட்டணம் வந்து சீஷரோடு ஏழு நாட்கள் தங்கிப் பின்பு பித்தலோமாய் பட்டணத்திற்கும், பின்பு செசரியா சென்று அங்கிருந்து எருசலேமுக்கும் போனார். வழியில் தீரு பட்டணத்திலும் செசரியா வந்த அகபுவாலும் எருசலேம் செல்லத் தடுக்கப் பட்டபோதிலும் தீர்மானமாய் எருசலேம் சென்றான்.

2. எருசலேம் சபைத் தலைவரைச் சந்தித்தல் 16—26

எருசலேம் சபைத் தலைவர்களைப்பற்றி நாம் காணும் சில விஷயங்கள்:

1. புறஜாதியாருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தல் தேவ நியமனம் என்று ஒப்புக்கொண்டார்கள்.

2. பவுலை ஊழியத்தில் தங்கள் சகோதரனாக அங்கீகரித் தார்கள்.

3. புறஜாதி விசுவாசிகளைப்பற்றி அவர்கள் முன் செய்த தீர்மானத்தை ஊர்ஜிதப்படுத்தினார்கள்.

4. யூதர், புறஜாதியார் ஐக்கியத்தை விருத்தி செய்யும் பிரயத்தனத்தில் பவுலோடு சேர்ந்துகொண்டார்கள்.

கலகமும் காவலும் 27–40

பவுல் நியாயப்பிரமாணத்திற்கு விரோதமாய் மூன்று யாணங்களிலும் போதித்தாரென்ற தப்பபிப்பிராயம் ருந்தது. பவுல்தான் நியாயப்பிரமாணத்தை மதித்தவ ன்று ரூபிக்க எருசலேம் தலைவர் ஆலோசனையை ஒப்புக் ாண்டார். யூதர் பவுலை 1. துரோகி என்றும் 2. பதிதன் வத விரோதி) என்றும் 3. தேவாலயத்தைத் தீட்டுப் த்தினவனென்றும் குற்றப்படுத்தினர்கள்.

யூதர் மாத்திரம் போகக்கூடிய உட்பிரகாரத்திற்கும் புற தியார் பிரகாரமாகிய தாழ்ந்த வரிசைக்குமிடையே ஒரு டைப்பு கிராதியுண்டு. அதில் 'உள்ளே போகிற புறஜாதி ர் மரணத்திற்குட்படுவார்கள்' என்று எழுதியிருந்தது.

எகிப்தியன். இவன் கொஞ்ச காலத்திற்குமுன் கொலை தகராகிய 30,000 பேருக்கு தலைவனுயிருந்த ஒரு எகிப்திய ன். இவன் தப்பியோடிவிட்டிருந்தான்.

அதிகாரம் 22

படிக்கட்டுப் பிரசங்கம்

1. பவுலின் நியாய வாதம் 1–29
2. சனதரீம் சங்க விசாரணை 30

சங்கிலியினல் கட்டப்பட்டு வெளிப் படிக்கட்டிலே இரு போர்ச்சேவகர் நடுவே நிற்கும் பவுல் இக்கலகக் கூட்டத்தை யும் பார்க்க, அவன் தன் சொந்த ஜாதியாருக்கு முன் கிறிஸ்துவுக்குச் சாட்சி சொல்வதற்கு நேர்ந்த இந்த முதற் சமயத்தை ஆதாயப்படுத்திக்கொள்ளவேண்டுமென்று தைரியத்தோடு ஆரம்பிக்கிறுர், எப்படியாகிலும் சிலரை இரட்சிக்கும்படிக்கு நான் எல்லாருக்கும் எல்லாமுமானேன் (1 கொ. 9:20–23).

அப்போஸ்தலன்

1. ரோமைச் சிலாக்கியம் பெற்றவர் 22:27
2. கிரேக்க ஞானியாகவும் 21:37
3. எபிரேய சமயத்தாளுகவும் 21:40
4. இயேசுவின் அடிமையாகவும் 22:14 தன்னைக் காட்டு கிறுர்.

நம்மைச் சுற்றி அநேக சமயத்தாரும் அநேக ஜாதிக் காரருமிருக்கிறுர்கள். நாம் எப்படியாவது சிலரை இரட்சிக்கும்படி அவர்களுடைய மார்க்க விஷயமான எண்ணங்களை அனுதாபத்தோடு அறிந்துகொள்ளவும், அவர்களுடைய மேலான வாஞ்சைகளைத் திருப்தி செய்யக்கூடியவர் கிறிஸ்துவே என்று காண்பிக்கவும் நாம் படித்துக்கொள்ளக் கூடாதா?

1. பவுலின் நியாயவாதம் 1–29

பவுலுக்கு விரோதமாய்ச் சாட்டப்பெற்ற மூன்று குற்றங்களை இங்கு நிராகரிக்கிறார்.

1. ஜனத்துக்கு விரோதமான துரோகி

2. வேதப் பிரமாணத்திற்கு விரோதமான பதிதன்

3. தேவாலயத்தைத் தீட்டுப்படுத்தினவன்.

1. தான் தர்சு ஊராளுயினும், பிறப்பு, படிப்பு, பாஷை முதலிய விஷயங்களில் உத்தம யூதனென்றும் துரோகியல்ல என்றும் காட்டுகிறார் 1–3.

2. யூத வேதப் பிரமாணத்தின்படி திட்டமாய்ப் போதிக்கப்பட்டு அவர்களைப்போலவே வைராக்கியமுள்ளவன். கிறிஸ்தவர்களைத் துன்பப்படுத்தினவன்; திட்டமான தேவ தரிசனம் பெற்றவன். வேதப் பிரமாணத்தின்படி பக்தியுள்ள அனனியாவின் ஞான போதனை அடைந்தவர். ஆதலால்

பதிதனல்ல 4–16.

3. எருசலேமில் வசிக்கும்படி யோசனையாய் எருசலேமுக்குத் திரும்பி வந்தபின், தேவாலயத்தில் ஆராதனை செய்யும்போது ஞான திருஷ்டியடைந்து, தேவனால் புறஜாதியாருக்கு அனுப்பப்பட்டவர். ஆதலால் தேவாலயத்தைத் தீட்டுப்படுத்தினவனல்ல 17–21.

சனதரீம் சங்க விசாரணை 30

யூதர், 'இவன் உயிரோடிருக்கிறது நியாயமல்ல' என்று கூக்குரலிட்டதால், அவன் மேலுள்ள குற்றம் இன்னது என்று அறியும்படி இவ்விசாரணை நடந்தது.

அதிகாரம் 23

செசரியா

1. சனதரீம் சங்க விசாரணை 1–11
2. சத்துருக்கள் சதியாலோசனை 12–22
3. செசரியாவுக்கு அனுப்பப்படல் 23–35

1. சனதரீம் விசாரணை 1–11

அனனியா என்பவன் 48–59 வருஷம் வரை பிரதான ஆசாரிய உத்தியோகஞ் செய்து வந்தான். இதன் மத்தியில் ஒருவித கொடுமையும் பொருளாசையுமுள்ளவனுயிருந்ததால் 52ஆம் வருஷத்தில் கிலவுதியுராயனுல் விசாரிக்கப்படும்படி ரோமாபுரி போய்த் திரும்ப வந்தான்.

வெள்ளையடிக்கப்பட்ட சுவரே

1. சாதாரண சனதரீம் கூட்டங்களில் பிரதான ஆசாரியன் தலைமை வகிப்பதில்லை. ஆதலால் அனனியாவைப் பவுல் அறிந்துகொள்ளவில்லை.

2. பவுலின் கண்கள் தெளிவாயிராததினுலே தன்னை அடிக்கக் கட்டளையிட்டவன் இன்னுனென்று அறியாமல் இப்படிச் சொன்னுர்.

உயிர்த்தெழுதலைப்பற்றிய நம்பிக்கை

மரித்தோரின் உயிர்த்தெழுதலில்லை என்று சதுசேயர் சாதித்தாலும், பரிசேயர் அதை ஒப்புக்கொள்கிறுர்களென்று பவுல் அறிந்து மகா விவேகத்தோடு, அவ்வுபதேசத்தைக் கூறி அவர்களுக்குள்ளே வித்தியாசத்தை உண்டுபண்ணினுர்.

ரோமாவிலும் சாட்சி

மிகவும் சோர்புற்றிருந்த அப்போஸ்தலனுக்கு ஆறுதலுண்டுபண்ணும் ஒரு வாக்குத்தத்தத்தைத் தேவன் இத்தரி

னத்தில் கொடுத்தார். 'திடன்கொள்' என்னும் வார்த்தை றிஸ்து அடிக்கடி உபயோகித்த வார்த்தை.

. சத்துருக்கள் சதியாலோசனை 12–22

பவுலைக் கொல்லவேண்டுமென்று ரகசியமாய்த் திட்ட ிட்டுக்கொண்டிருந்த நாற்பது யூதரின் சதி நிறைவேறாத ால் தங்கள் தலைகளின்மேல் தேவ சாபத்தையே வருவித்துக் கொண்டார்கள்.

வுலின்) சகோதரியின் குமாரன்

இவன் இன்னானென்று திட்டமாய்த் தெரியாது. ஒரு வளை சனதரீம் சங்கத்தைச் சேர்ந்த ஒருவனாயிருக்கலாம்.

. செசரியாவுக்கு அனுப்பப்படல் 23–35

லீசியா, பேலிக்ஸுக்கு எழுதின கடிதத்தில் பவுல் குற்ற ற்றவன் என்று காண்கிறது. யூதரின் மூர்க்கத்தைச் சனாதிபதி அறிந்தவனாகையால் இவ்வளவு பலத்த ராணு த்தைப் பவுலோடு அனுப்பினான்.

ர்த்தர் பவுலின் அருகே நின்று 'திடன்கொள்' என்றார் 23:11

நாம் காணக்கூடிய விதமாகவோ, நாம் காணக்கூடாத ிதமாகவோ, அவர் நம் பக்கத்திலும் நின்று இதே தைரிய ார்த்தைகளைச் சொல்கிறார்.

1. நம் பழைய பாவத்தைக் குறித்து 'திடன்கொள், உன் ாவங்கள் மன்னிக்கப்பட்டது' என்று சொல்ல வல்லவர் லூ. 7:48).

2. தற்காலத்தில் எழும்பும் சந்தேகமாகிய இருளிலே திடன்கொள், நான்தான் பயப்படாதே' என்று சொல்லு றார் (மா. 6:50; மத். 14:27).

3. வருங்காலத்தை நினைத்து நாம் திகிலடையும்போது திடன்கொள், நான் உலகத்தை ஜெயித்தேன்' என்று சால்லுகிறார் (யோ. 16:33).

அதிகாரம் 24

பேலிக்ஸ் (பலஸ்தீன தேசாதிபதி)

1. பவுல் பேலிக்ஸுக்கு முன் நிறுத்தப்பட்டது 1–9.
2. பவுலின் உத்தரம் 10–27.

1. பவுல் பேலிக்ஸுக்கு முன் நின்றது 1–9

பேலிக்ஸ் கிலவுதியு ராயனுடைய தாயின் அடிமை. சிற்றின்பப்பிரியன். கி.பி. 51இல் யூதேயாவுக்கதிபதியாகிக் குடிகளை வெகு அநியாயமாக ஆண்டு, சீக்கிரத்தில் நீரோ ராயனால் தள்ளுண்டான். கிலவுதியுவினால் தேசாதிபதியானான்.

தெர்த்துல்லு ஒரு வக்கீல். பேலிக்ஸுடைய தயவை அடைய முகஸ்துதி பேசுகிறான் (வ 2)

பவுலின் மேல் சாட்டின குற்றங்கள் 5–6 வாக்கியம்.

2. பவுலின் உத்தரம் 10–27

தெர்த்துல்லு கூறிய குற்றங்கள் அபத்தமென்றும், தான் யூத மார்க்க விரோதியல்லவென்றும் உயிர்த்தெழுதலைப் பற்றி நம்பிக்கையுடையவனென்றும் கூறுகின்றார்.

துருசில்லா (வ 24) பெரிய ஏரோதின் பேரனான I ஏரோது அகிரிப்பாவின் (12:1) புத்திரியாயும், II அகிரிப்பாவின் சகோதரியாயும். எமெசா (வடபலஸ்தீனாவின்) நாட்டுச் சிற்றரசனின் மனைவியுமான ஒரு யூதஸ்திரி. இவள் தன் புருஷனை விட்டோடி பேலிக்ஸை மணந்து கொண்டவள். யூத ஸ்திரியாகிய இவள் பவுலாகிய கிறிஸ்தவனுடைய பிரசங்கத்தைக் கேட்க ஆசைப்பட்டாள். ஆனால் பவுல், 'நீதியையும் இச்சையடக்கத்தையும் இனிவரும் நியாயத்தீர்ப்பையும்' குறித்துப் பேசுகையில் பேலிக்ஸும், துருசில்லாளும் பயமும் கோபமுமடைந்தார்கள். பவுலை இரண்டு வருஷம் காவலில் வைக்கப்பட்டதற்குத் துருசில்லாளே காரணம்.

அதிகாரம் 25

பெஸ்து

1. பெஸ்துவும் பவுலும் 1–8
2. ராயனுக்கு அபயமிடுதல் 9–12
3. அகிரிப்பாவும் பவுலும் 13–27.

பெஸ்துவும் பவுலும் 1–8

பெஸ்து பேலிக்சை விட நல்லவன். அவன் உத்தியோகத் ற்கு வந்த கொஞ்ச நாளில் மரித்துப் போனன். பவுலின் பிருக்கு உலே வைத்துக்கொண்டிருந்த யூதர் அவனே வுலே) எருசலேமுக்குக் கொண்டுவரும்படி பெஸ்துவை கட்டுக்கொண்டார்கள்.

ராயனுக்கு அபயமிடல் 9–12

எருசலேம் சென்ருல் ஆபத்துண்டாகுமென்றறிந்த பவுல், ராயனுக்கு அபயமிடுகிறேன்' என்ருர். இதினுல் பவுலி டைய கோரிக்கையும் (19:21), கடவுளுடைய வாக்குத் த்தமும் (23:11) நிறைவேறின. ரோமைக்குப் போய் சாரிக்கும்படியாய் இப்படிச் சொன்னுர்.

அகிரிப்பாவும் பவுலும் 13–27

அகிரிப்பா II, இவன் முதலாம் அகிரிப்பாவாகிய (12:1) ரோது அகிரிப்பாவின் மகன். 17 வயதில் தகப்பன் இறந்து பானன். யூதனுனலும் ரோமையில் வளர்ந்து ரோமர் க்கத்தில் சேர்ந்தவன். நேரோ ராயனுல் ராஜனுக்கப்பட் ான். பெஸ்துவாகிய புது தேசாதிபதியைக் கண்டு பேச ந்த இவன் பெஸ்துவுக்கு ஆலோசனே கொடுக்க வேண் யதாயிருந்தது. ஏரோது வம்சத்தின் கடைசி அரசன்.

பெர்னிக்கேயா அவன் சகோதரி. என்ருலும் அவளோடு றைகேடாய் வாழ்ந்து வந்தான்.

அதிகாரம் 26

ஏரோது (அகிரிப்பா II)

அகிரிப்பா முன் செய்த பிரசங்கம்

பவுல் அப்போஸ்தலன் அந்த ராஜசபையில் தைரிய மாய்க் கிறிஸ்துவுக்காக சாட்சி பகர்ந்தார். இந்தப் பிரசங்க மும் 22ஆம் அதிகாரத்தில் அடங்கிய பிரசங்கமும் பொருளில் ஒன்றுபோலிருக்கிறது. என்ருலும் மூன்று முக்கிய பிரிவுக ளோடு சிந்திப்போம்:

1. குணப்படுதலுக்கு முன்னுள்ள ஜீவியம் 4–11
2. குணப்படுதல் 12–19
3. குணப்படுதலுக்கு பின்னுள்ள ஜீவியம் 20–23.

1. குணப்படுதலுக்கு முன்னுள்ள ஜீவியம் 4–11

1. நான் மத வைராக்கியமுள்ளவன் 4,5
2. மேசியாவைப் பற்றிய வாக்குத்தத்தத்தை விசுவா சிக்கிறேன் 6,7
3. யூத மத வைராக்கியத்தால், கிறிஸ்தவர்களைத் துன்பப்படுத்தினேன் 8–11.

2. குணப்படுதல்

பவுல் கண்டது, பொய்த் தோற்றமான போலி தரிசன மல்ல, மெய்த் தரிசனமே என்று காட்டும் ரூபகாரங்கள்:

1. மத்தியான சூரிய வெளிச்சத்தைவிட பிரகாச முள்ள ஒளி 13
2. நாங்கள் எல்லாரும் தரையில் விழுந்தோம் 14
3. எபிரேய பாஷையில் பேசினுர் 14.

குணப்படுதலினுலுண்டான மாறுதல் என்ன?

'நசரேயனுகிய இயேசு ஈனமாய் சிலுவையில் மரித்தவர், அரூபியாய் ஜீவிக்கிற அவர். தன்னுடைய சொந்த மீட்பர் என்னும் அறிவே'. இந்த நிச்சயமே அவர் ஜீவிய முழுவதையும் ஆண்டுகொண்டது.

3. குணப்படுதலுக்குப் பின்னுள்ள ஜீவியம் 20–23

1. சாட்சி 16,22

2. ஊழியம் 20

3. கிறிஸ்து சர்வ ஜன மீட்பர் 23.

இந்த வேலை கஷ்டமாயினும், கிறிஸ்து அவனைக் காப்பதாக வாக்களித்தார் (2 தீமோ. 3:11; 4:17,18). 'ஆகையால் அகிரிப்பா ராஜாவே நான் அந்தப் பரம தரிசனத்துக்குக் கீழ்ப்படியாதவனுயிருக்கவில்லை' (19). வெளிச்சத்திற்குக் கீழ்ப்படிவது பவுலுடைய ஜீவியப் பிரமாணம். தரிசனத்தைக் கண்ட பிறகு அவர் ஒருவேளை பின்னிட்டு, எருசலேமுக்குப் போய் ஒரு ரபியாகவாவது, சனதரீம் சங்கத்து அங்கத்தினராகவாவது ஆகி வாழ்ந்திருக்கலாம். ஆனுல் அவர் பின்னிடவில்லை. 'ஆபிரகாமைப்போல், ஏசாயாவைப்போல், நெகேமியாவைப்போல், கிறிஸ்துவைப்போல் பரம தரிசனத்திற்குக் கீழ்ப்படிந்தார்.

எனக்கும், உமக்கும் கடவுள் தரிசனங்களை அளிப்பார். என் தேசத்தின் தேவை, என் சபையின் தேவை, என் குடும்பத்தின் தேவை யாது என்பதையும் அதைப்பற்றிய என் கடமையையும் நான் காணும்போது, சத்தியத்தைக் காட்டும் ஒவ்வொரு தரிசனத்துக்கும் நான் கீழ்ப்படிந்து வெளிச்சத்தில் நடப்பேனுக. 'கொஞ்சம் குறைய' மூல பாஷையில் 'கொஞ்சத்தில்' என்றிருக்கிறது.

அதிகாரம் 27

கப்பற் சேதம்

பவுல் ரோமைக்குச் செய்த யாத்திரை

1. செசரியா முதல் மீரு வரை 1–6

2. மீரு முதல் கிரேத்தா தீவு வரை 7–20

3. கிரேத்தா தீவு முதல் மெலித்தா தீவு வரை 21–44.

1. செசரியா முதல் மீரு வரை 1–6

பவுலும் மற்ற கைதிகளும் ரோம சேனைத் தலைவன் வசமாய்ச் சின்ன ஆசியாவைச் சேர்ந்த ஓர் கப்பலில் ஏறி லீசியா நாட்டிலுள்ள மீரு பட்டணத்திற்குப் போய், அவ்விடத்திலிருந்து அலெக்சந்திரா பட்டணத்தைச் சேர்ந்த ஓர் கப்பலில் யாத்திரை செய்தார்கள். லூக்காவும் அரிஸ்தர்க்கும் பவுலின் ஊழியக்காரராக அவரோடு போயிருக்கக்கூடும் (2 வ).

2. மீரு முதல் கிரேத்தா தீவு வரை 7–20

எதிர்காற்றுனதினுலே அநேக நாள் தடைப்பட்டுக் கிரேத்தா தீவின் தென்கரையில் மழைக்காலத்திற்குத் தங்க வேண்டுமென்று தீர்மானித்துத் துறைமுகம் நோக்கிப் போகும்போது பெருங்காற்று உண்டானதினுலே அநேக நாள் பெரிய ஆபத்திலிருந்தார்கள். 'இனி பிழைப்போமென்ற நம்பிக்கை முழுமையும் அற்றுப்போயிற்று' 20.

3. கிரேத்தா தீவு முதல் மெலித்தா தீவு வரை 21–44

கிரேத்தா தீவை விட்டு புறப்பட்டதும் கடுங்காற்று கப்பலில் மோதி திசை தெரியாது 13 நாள் மிகவும்

கஷ்டத்துக்குள்ளானார்கள். இச்சம்பவத்தில் பவுல் அப்போஸ்தலனின் சாமர்த்தியத்தைப் பார்க்கிறோம்.

1. எச்சரிப்பும் ஜாக்கிரதையும் 10,21,31
2. புத்தி சாமர்த்தியம் 22–24
3. கடவுள் பேரிலுள்ள நம்பிக்கை 23–25
4. விசுவாசம், சாட்சி 25–35
5. அவன் அடைந்த ஜெயம் 36.

அதிகாரம் 28

ரோமாபுரி

பவுல் ரோமைக்குச் செய்த யாத்திரை (தொடர்ச்சி)

4. மெலித்தா தீவு முதல் சிரகூசா வரை 1–12

மெலித்தா தீவார் உபசரணை செய்தார்கள். சமுத்திரத்திற்குத் தப்பின பவுலைச் சர்ப்பம் தீண்டிற்று. கொடிய பாதகன் என்று அவரை அத்தீவார் எண்ணினர். அவர் மரிக்காமலிருப்பதைக் கண்டு தேவனென்று போற்றினர். பவுல் அநேகரைச் சுகப்படுத்தினான். பவுல் எந்த நிலைமைக்கும் ஒத்து நடந்துகொள்ளக்கூடியவன். மூன்று மாதமாக அங்கே தங்கினார்கள்.

5. சிரகூசாவிலிருந்து ரோமை நகரம் வரை 13–16

சிரகூசாவில் 3 நாள் தங்கிப் புத்தேயோலி பட்டணத்துக்கு வந்து 7 நாட்கள் தங்கிச் சீஷரில் சிலரைக் கண்டு 'பின்பு ரோமாபுரி போவேனும்,' பவுலின் பேராவல் நிறைவேறிற்று (ரோ. 1:11–12). ஆனால் அநேக வருஷங்கள் அவன் காத்திருக்க வேண்டியதாயிருந்தது. கஷ்டமான நெடும் பிரயாணம் என்றாலும் கடைசியாய் அவன் நினைத்த காரியம் கைகூடினது.

6. ரோமையிலிருந்த கடைசி நாட்கள் 17–31

வாடகை வீட்டில் யூதருக்கும் புறஜாதியாருக்கும் பிரசங்கித்தான். 2 வருஷம் முழுதும் அவனுடைய இடைவிடாத கிறிஸ்தவ முயற்சியையும், ஜெப ஜீவியத்தையும் அவன் அக்காலத்தில் எழுதின எபேசியர், பிலிப்பியர், கொலோசெயர், பிலமோன் நிருபங்களில் காணலாம்.

லூக்கா சுவிசேஷகன் இன்னொரு ஆகமத்தில் பவுலின் ந்தியகால சம்பவங்களை எழுத நினைத்தானென்றும், அது க்கூடவில்லை என்றும் பலர் அபிப்பிராயப்படுகிறார்கள்.

பிற்சேர்க்கை—1

ப். 3:18 இயேசு பாடுபட்டதின் ரகசியம்

1. யூதரின் செயல்
2. கிறிஸ்துவின் பாவமின்மை
3. மரணம் ஜீவனின் வாசல்
4. கடவுளின் அனாதித் தீர்மானம்
5. பொது மக்களின் அறியாமை
6. திருமறையின் நிறைவேறுதல்.

ப். 4:2

சினங்கொண்டு பிடித்தார்கள் ஏன்?

1. ரபிமார்போல் பிரசங்கித்தார்கள்
2. கல்வி அறிவற்றவர்களாயிருந்தும் போதித்தார்கள்
3. லேவியர், ஆசாரியரல்லாதவராய்ப் போதித்தார்கள்
4. கிறிஸ்துவைக் குறித்துப் பிரசங்கித்தார்கள்
5. உயிர்த்தெழுதலைப் பிரசங்கித்தார்கள்
6. தேவாலயத்தில் பிரசங்கித்தார்கள்
7. ஜனங்கள் அவர்கள் பக்கமானார்கள்
8. பலி நேரத்தில் பிரசங்கித்தார்கள்.

ப். 5 அனனியாவின் குற்றம்

1. கிரயத்தில் ஒரு பங்கை வஞ்சித்தெடுத்தான்
2. அப்போஸ்தலரிடம் பொய் சொன்னான்
3. தன்னை நீதிமானாகக் காட்ட பிரயாசப்பட்டான்
4. கீர்த்தியடைய விரும்பினான்

5. அக்கீர்த்தியையடையத் தப்பான வழி சென்றான்
6. பண ஆசை.

பண ஆசையுள்ளோர்—ஆகான்—கேயாஸ்—எலிமா. பிலிப்பு பட்டண ஆண்டவர்கள்—எபேசு தட்டார்—பேலிக்ஸ்.

அப். 6. கைகளை வைத்தல்

1. பணிவிடை நியமகம் 6:6
2. சமாரியாவில் பேதுருவும், யோவானும் 8:17.
3. அனனியா, பவுல் 9:17
4. பர்னபா, சவுல் 13:3
5. எபேசுவில் பவுல் 19:6
6. பவுலும் புப்பிலியுவின் தந்தையும் 28:9.

ஸ்தேவான் மரணத்திற்குப் பின் இக்கழகம் கலைந்தது. அதன்பின் மூப்பர் என்ற சங்கம் உண்டாயிற்று.

ஸ்தேவான்—கிரேக்கப் பெயர், கிரீடம் என்பதர்த்தம். விசுவாசத்தைப்பற்றிய விரிந்த நோக்குமுடையோர். அவர் பிரசங்கமே நடபடிகளில் நீண்டது, இரத்தசாட்சி. மோசேயின் பிரமாணம், தேவாலயம் இவைகளை சரியானபடி போதித்தார். பவுலின் ஆத்ம போதகர். பேதுருவுக்கும் பவுலுக்கும் இடையிலுள்ள இணைப்புத்தொடர். யூதர், புறஜாதியார் சமத்துவத்தை நிலைநாட்டியவர். சவுல் என்ற வாலிபனின் திறவுகோல். கிறிஸ்துவின் சிந்தை உள்ளவர் (மரண வார்த்தை). லிபத்தீனரில் ஒருவராயிருந்திருக்கலாம். கடின உழைப்பாளி. தைரியசாலி. போதக சமர்த்தன். போதக சாதகன்.

பிலிப்பு—அரிய வரங்கள் பெற்றவர். சுவிசேஷகர். எலியாவைப்போல் ஆவிக்குள் அங்கும் இங்கும் அலைந்து சுவிசேஷம் அறிவித்தார். திடீரெனத் தோன்றி திடீரென மறைந்து ஊழியம் செய்தார். பவுலின் முன்னோடி. இரண்டு

ஒப்பற்ற ஊழியம் ஆற்றினர்: 1. சமாரியருக்கு சுவிசேஷம் அறிவித்தார். 2. எத்தியோப்பியனுக்கு ஞானதீட்சை யளித்தார்.

வ. 8 மிகுந்த சந்தோஷம்—கிறிஸ்து சமயமே சந்தோஷ மார்க்கம். மாலையில் துன்பம், காலையில் இன்பம். ஏனெனில்,

1. கடந்த பாவத்திற்கு பாவமன்னிப்பின் நம்பிக்கைக் கொடுக்கிறது.

2. தற்காலத் தூய்மைக்கு உரிய துணை அருளுகிறது.

3. வருங்கால மகிழ்ச்சியையும் எதிர்நோக்குகிறது.

சீமோன்—மந்திரவாதி, மிக கண்யமாய் மதிக்கப்பட்டு வந்தான். சமாரியர்களால் போற்றப்பெற்றான். கடவுளைப் பற்றிய ஒருவிதத் தவறான சித்தாந்தம் உண்டுபண்ணினன். கடவுளின் பல அம்சங்களில் தானும் ஒன்றெனச் சாதித்தான். கிலவுதியுராயன் காலத்தில் ரோமைக்குப் போனான். அங்கு அவனுக்கு ஒரு சிலை அமைக்கப்பட்டது. தன்னைக் கடவுளின் குமாரன் என்றும்கூட அழைத்தான். தகாத வாஞ்சை கொண்டான். கடவுளின் ஆவியைப் பணத்திற்குக் கொள்ளப் பிரயாசைப்பட்டான்.

இரண்டு சீமோன்கள்

1. ஒருவர் கடவுள் ஆவியை வரமாகப் பெற்றார். மற்றவன் கடவுளின் ஆவியை மந்திரமாகப் பெற முயன்றான்.

2. ஒருவர் கிருபையைச் சம்பாதிக்க பரிசுத்த ஆவியைப் பெற்றவர். மற்றவன் பணத்தைச் சம்பாதிக்க ஆவியை அடைய பிரயாசப்பட்டவன்.

3. ஒருவர் கடவுள் சித்தத்திற்குத் தம்மை ஒப்புவிக்கப் பரிசுத்த ஆவியைப் பெற்றவர். மற்றவன் தன் சித்தப்படி நடக்கக் கடவுள் ஆவியைப்பெற ஆசைப்பட்டான்.

4. ஒருவர் விசுவாசத்தினுல் ஆவியைப் பெற்றவர். மற்றவன் குப்பையாம் பணத்தால் அதைப் பெற ஆசித்தான்.

5. ஒன்று ஜெபம்—மற்றது மந்திரம்.

6. ஒன்று ஒளி—மற்றது இருள்.

பிற்சேர்க்கை—2

முதலாம் பிரயாணத்திலிருந்து நாம் கற்றுக்கொள்ளும் பாடங்கள்

1. கடவுள் புறஜாதியாருக்கு விசுவாசத்தின் கதவைத் திறந்தார் 14:27. சுவிசேஷம் யூதருக்கு மட்டுமல்ல, விருத்தசேதனமில்லாத சர்வ ஜனங்களுக்கும் உரியது. எருசலேம் சங்கம் இதை அங்கீகரித்தது. சபையில் வித்தியாசம் இருக்கலாகாது

2. சபை வளர்ந்து விசாலித்தது. 'கர்த்தருடைய வசனம் அத்தேசமெங்கும் பிரசித்தம் ஆயிற்று' 13:49. 'அநேகர் சீஷர்களானார்கள்' 14:21. எருசலேமிலிருந்து உலகமனைத்துக்கும் சபை விசாலித்தது

3. பவுல் ரோம ஆட்சியின் முக்கிய ஸ்தலங்களைச் சந்தித்தார். அவைகளில் உண்டான சபை பக்கத்துச் சபைகளை உண்டுபண்ணும்

4. பவுலின் ஊக்கம்—மரித்துப் போனாரென்று எண்ணப்பட்டவர் எழுந்து 30 மைல் தூரம் நடந்தார் 14:20

5. யூதருடைய பெருமையும் பொறாமையும் அதிகரித்தன.

இரண்டாம் பிரயாணத்திலிருந்து நாம் கற்றுக்கொள்ளும் பாடங்கள்

1. பவுலும் பர்னபாவும் மனஸ்தாபத்தோடே பிரிந்து போனபோதிலும், கர்த்தர் அதை நன்மைக்கேதுவாகவே ஆண்டுகொண்டார் (ரோ. 8:28)

2. பவுல் ஊழியரை அங்கங்கே தெரிந்தெடுத்து அவர்களைச் சுவிசேஷ ஊழியத்தில் பழக்கினர். (எ-டு) தீமோத்தேயு.

3. பரிசுத்தாவி தடைசெய்த இடத்திற்குப் போகாமல் கட்டளையிட்ட இடத்திற்கே சென்றார்

4. தனித்தாள் வேலையில் பவுல் சிறந்தவர். வீதியாள் மட்டும் குணப்பட்டும், வேலை செய்தார். பின் ரோம சிறைச்சாலைக்காரன், கிரேக்க அடிமை இவர்கள் மூலமாய் பெரிய வேலை நடந்தது

5. அப்போஸ்தலனின் தைரியமும் விசுவாசமும். 'நடு ராத்திரியிலும் பாடினூர்கள்'

6. சமயோசிதமாய் பேசும் திறமை—கிரேக்க ஞானிகட்குச் செய்த பிரசங்கம்.

7. கூடார வேலை செய்து ஜீவித்தார்.

மூன்றும் பிரயாணத்தில் அப்போஸ்தலன் வேலை செய்த விதத்தைப்பற்றி என்ன படிக்கலாம்?

1. ராஜ தந்திரமறிந்த மந்திரியைப்போல் வருங்காரியங்களை யோசித்துப் பெரிய காரியங்களைச் செய்ய ஒழுங்கு செய்தார். ரோமைக்குப் போகவேண்டுமென்பது அவர் ஆசை

2. போன இடமெல்லாம் சுவிசேஷ வாஞ்சையின் அனல் மூட்டிவிட்டார் (19:10)

3. அந்தந்த இடத்தினரையே ஆங்காங்குள்ள சபைகளை நடத்தும் உத்தியோகஸ்தராக நியமித்து, கிறிஸ்தவர்களை வேலையில் பழக்கினுர் (தீமோத்தேயு மற்றும் பல ஊழியர் (20–21)

4. எத்திறத்தாருக்கும் ஊழியர். யூதனுக்கும் ரோமனுக்கும் சிறைச்சாலைக்காரனுக்கும் ஞானிக்கும் தன்னை உபயோகமாக்கிக்கொள்ளும் சக்தியிருந்தது

5. எந்த மனுஷனையிட்டும், எப்படிப்பட்ட நிலைமையின் நிமித்தமும் அவர் திகைத்துப் பின்வாங்கவில்லை (16:25; 1 கொ. 16:19)

6. பரிசுத்தாவியால் தன் ஊழியத்தைத் துவக்கி அவரால் அதை நடத்தியும் முடித்தும் வந்தார் (19:12)

7. தற்பிரதிஷ்டை 'என் பிராணனையும் அருமையாக எண்ணேன். 'என் ஓட்டத்தை சந்தோஷமாய் முடிக்கவும், ஏசுநாதரிடத்தில் பெற்ற ஊழியத்தை நிறைவேற்றவும் விரும்புகிறேன்' (20:24).

பவுல் பர்னபா பேதம்

திருச்சபையில் ஏற்பட்ட பல குறைவுகளில் இது ஒன்று. ஊழியருக்குள் பேதம். இதையும் கடவுள் நன்மையாகக் கட்டளையிட்டார்.

1 இரண்டு இடங்களில் சுவிசேஷ ஊழியம் நடந்தது. சீப்புரு தீவு, சின்ன ஆசியா முதலியன

2. புதிய ஊழியர் இவ்வேலையில் ஈடுபட்டனர். யோவான், மாற்கு, சீலா

3. பிற்காலத்தில் இருவரும் (பவுல், பர்னபா) ஒப்புரவானுர்கள் (1 கொ. 9:6)

'ராயனுங்கு அபயமிடுகிறேன்' என்பதின் பேரில் சில குறிப்புகள்

1. பவுலின் ரோம உரிமையைக் காட்டிற்று

2. பவுல் ரோம அரசரைப் பற்றிக்கொண்டிருந்த மதிப்பு விளக்கப்பட்டது. ராஜ துரோகி என குற்றம் சாட்டினவர்கள் அவமானத்திற்குள்ளானுர்கள்

3. அவரை ரோமாபுரிக்கு நடத்தக்கூடிய கார்மேகம் இதுவே

4. பவுல் தேசாதிபதியாகிய பெஸ்துவின் நியாயமற்ற குணத்தை அறிந்துகொண்டதால், பெஸ்து நீதி செய்யான் என்பதை இது வெளியாக்கிற்று. பெஸ்துவும் ஒரு பேலிக்ஸே.

ஸ்தோத்திரித்து தைரியமடைந்தான். ஏன்? (அதி. 28)

1. காண ஆசையாயிருந்த நாட்டைக் கண்டான்

2. கப்பற் சேதத்தினின்று காக்கப்பட்டுத் தான் கோரிய நாட்டையடைந்தான்

3. சகோதரர் தான் எண்ணியதற்கு மாருக அவனே
பசரித்தனர். ரோமாபுரியைக் காண ஆசித்தபோதிலும்,
ராமையின் மூவகை ஜனங்களாகிய யூதர், புறஜாதியார்,
றிஸ்தவர்கள்—இவர்களுக்கு எவ்வாறு சுவிசேஷம் அறிவிப்ப
தன்றும் ரோம அரசியல் நிலே எத்தகையது என்றும் கலக்க
ற்ற அப்போஸ்தலனுக்குச் சகோதரர் எதிர்கொண்டு வந்த
ருகையும் உபசரிப்பும் கடவுளுக்கு நன்றிசெலுத்தித் தைரிய
டைய ஏவிற்று. நன்றிசெலுத்துதல் பவுலின் ஆன்மீகத்
ன் ஒரு முக்கிய பாகமாகவே இருந்தது.

இந்தியாவின் எதிர்காலச் சபை

(அருள்திரு. எஸ். பரமானந்தம் ஐயர் 1728ஆம் ஆண்டில் வேலூரில் ஆற்றிய அருளுரை)

இது நமது சபையின் ஜூபிலிக் கொண்டாட்டத் தினம். இத்தனே திரளான ஜனங்களே மகா பிரமாண்டமான இந்தப் பந்தலின்கீழ் பார்ப்பது எவ்வளவு சந்தோஷமாயிருக்கிறது. கடந்த வருஷங்களில் ஆண்டவர் நமக்குச் செய்த ஏராள மான நன்மைகளே நினேத்து அவரை ஸ்தோத்திரிக்கும்படி இங்கே கூடியிருக்கிறோம். 'இந்தியாவின் எதிர்காலச் சபை' என்னும் விஷயத்தின்பேரில் நான் பேசும்படி அழைக்கப்பட் டிருக்கிறேன். எதிர்காலச் சபை என்று சொல்லும்போது நமது கருத்தென்ன? ஓர் புதிய சபையை உண்டாக்குவதா? அல்லது இப்போதிருக்கிற சபையை வேறு விதமாக மாற்று வதா? இரண்டுமல்ல. ஓர் விருக்ஷம் எவ்வளவு பெரிதாயி னும் அதன் வேரிலிருந்தே வளரவேண்டுமேயன்றி மற்றப்படி யல்ல. திருச்சபையின் வேரை பெந்தெகொஸ்தில் காண் கிறோம். கர்த்தர் மோசேயை நோக்கி: 'நான் மலேயில் உனக்குக் காண்பித்த மாதிரியின்படியே செய்ய ஜாக் கிரதையாயிரு' என்று சொன்னதுபோல சபாநாயகராகிய ஆண்டவரும் நம்மைப் பார்த்து: நான் உனக்கு பெந்தெ கொஸ்தில் காண்பித்த மாதிரியின்படியே சபையைக்கட்டு என்று சொல்லுகிறார். நாம் எவ்வளவோ தேறிவிட்டோம், பின்ணுகப் பார்க்க வேண்டியதென்னவென்று சிலர் கேட்க லாம். தேவனுடைய சபை பூரணமாகும் வரை மாதிரியை நாம் இழந்துவிடக்கூடாது.

மாதிரியின் மகத்துவத்தை இப்போது கவனிப்போம்

ஆண்டவர் சீஷர்களைத் தெரிந்துகொண்டு அவர்களுக்குப் போதித்து அவர்களைப் பக்குவப்படுத்தி வந்தார். அவர்களைக் கொண்டு தமது சபையை ஸ்தாபிப்பதாகச் சொன்னார். அவர் மரித்து, எழும்பி, மகிமைப்படும்வரை சபை ஸ்தாபிக்கப்படவில்லை. தேவனைவிட்டு மனுஷனைப் பிரித்த பாவம் நீங்கும் வரை ஆவியானவர் மனுஷருக்குள் வர இடமில்லை. இதை நினைத்தே: 'நான் முழுகவேண்டிய ஒரு ஸ்நானமுண்டு, அது முடியும்வரை எவ்வளவோ நெருக்கப்படுகிறேன்' என்று ஆண்டவர் சொன்னார். அக்கினியாகிய ஆவியானவர் வருவதற்கு அவர் மரிக்கவேண்டியது அவசியம். அதற்குமுன் தமது சபையை ஸ்தாபிக்கவோ, சபை மூலமாய்த் தமது ஊழியத்தை நிறைவேற்றவோ முடியாது. திருச்சபையின் ரகசியம் பரிசுத்தாவியானவரே. ஆவியானவரின் போதனையும் நடத்துதலுமே திருச்சபையின் வெற்றி. திருச்சபை வளரவேண்டிய வேர் ஆவியானவரே. ஆண்டவர் பெந்தெகொஸ்தில் காண்பித்த மாதிரியே எக்காலத்திலும் சபைக்கு மாதிரி. வேறு சபையை நாம் அறியமாட்டோம். ஆவியினால் நிறைந்த விசுவாசிகள் ஒன்றாய் இணைக்கப்பட்ட சரீரமானார்கள். கிறிஸ்து சரீரமாகிய சபைக்குச் சிரசானார். அவரே நமக்கு ஜீவனானார்.

பெந்தெகொஸ்தில் நடந்த விசேஷமென்ன?

பிதா வாக்குப்பண்ணினதும், முற்பிதாக்கள் அறிவித்ததும், விசுவாசிகள் எதிர்பார்த்ததும், ஸ்நானகன் உரைத்ததும், ஆண்டவர் உறுதிப்படுத்தினதுமான ஓர் பெரிய சம்பவம் பெந்தெகொஸ்தே நாளில் நிறைவேறினது. சகலமும் புதிதாயின. ஆண்டவருக்கே அது ஓர் புதிய நாள், அப்போஸ்தலருக்கும் அது ஓர் புதிய நாள். அதற்கொப்பான நாள் முன் ஒருபோதும் இருந்ததில்லை. ஆதிமுதல் நடந்த சகல காரியங்களும் இந்த நாளையே நோக்கிக்கொண்டிருந்தன. சபை பூமியில் ஸ்தாபிக்கப்பட்டது. தேவன் மனுஷருள்ளத்தில் வசிக்கலானார்.

பெந்தெகொஸ்தே நாளில் கிறிஸ்துவில் சம்பவித்த புதிய காரியங்கள் எவை? அதை அறியவேண்டுமானால் பெந்தெகொஸ்தே நாளுக்கு முன்னுள்ள அவருடைய காரியங்களைக் கவனிக்கவேண்டும். அவர் மாம்சத்தில் வெளிப்பட்டது ஒரு விசேஷம். அவரது மரணம் ஒரு விசேஷம். அவர் மாம்சத்தில் வந்து, மனுஷர் நடுவில் சஞ்சரித்து, உபதேசித்து, கிரியைகள் நடப்பித்ததால் பிதாவை நமக்கு வெளிப்படுத்துகிறவரானார். அவர் மரித்து, உயிர்த்து, மகிமையடைந்ததால் மனுஷரை ரட்சிக்கிறவரானார். அவர் தேவனை வெளிப்படுத்தவும், உலகை மீட்டு ரட்சிக்கவும் வந்தார். இவை யாவும் பெந்தெகொஸ்தே நாளுக்கு முன் நடந்தவைகள். ஆகிலும் மனுஷர் அவரையாகிலும் அவருடைய ரட்சிப்பையாகிலும் அறிந்துகொண்டவர்களல்ல. ஆண்டவர் வந்த நோக்கம் பெந்தெகொஸ்தில்லாமல் நிறைவேறமாட்டாது. ஆகையால் அந்த நாள் வரும்படி அவர் ஆவலோடு எதிர்பார்த்தார்.

அந்த நாள் வந்தது. ஆண்டவர் தமது ரட்சிப்பை சீஷர்கள் ஜீவியத்தில் பலிதப்படுத்தினார். ஆவியானவர் அவர்களுக்குள் வந்தபோது, சிலுவையின் வெற்றியைத் தங்கள் அனுபவத்தில் கண்டடைந்தார்கள். தாங்கள் வெறுத்துத் தள்ளின சிலுவையே தேவபலமாயிருப்பதை அறிந்தார்கள். அதுமாத்திரமல்ல, முன் வெளிப்படாத அநேக காரியங்கள் வெளிப்பட்டன. 'நான் என் பிதாவிலும், நீங்கள் என்னிலும், நான் உங்களிலும் இருப்பதை அந்நாளில் அறிவீர்கள் என்றார்.' அப்படியே அறிந்தார்கள். கிறிஸ்து தமது ஆவியின் மூலமாய் அவர்களுக்குள் வந்து தம்மை அவர்களுக்கு வெளிப்படுத்தினார். அவர்கள் ஆவியினால் நிறைந்தபோது, ஆவியானவரையல்ல, கிறிஸ்துவையே தங்களுக்குள் கண்டார்கள். அவரை இன்னாரென்றும் அறிந்தார்கள். அவர்கள் ஜீவியத்திலும் பெரிய மாறுதல் உண்டாயிற்று. உயிர்த்தெழுந்த ஆண்டவர் தமது உயிர்த்தெழுதலின் புதிய ஜீவனாலே அவர்களை நிரப்பினார். அவர்கள் கிறிஸ்துவுடன் கூட எழுந்து, தங்களிலுள்ள பரம ஆவியினால் மேலானவைகளையே தேடினார்கள். இவ்வாறு ஆண்டவர் அவர்களை

தற்காக ஆயத்தம்பண்ணிக்கொண்டு வந்தாரோ, அந்த நோக்கம் அவர்களில் நிறைவேறினதைக் கண்டு மகிழ்ச்சி யடைந்தார். அவர்கள் ஆவியினால் நிரப்பப்படவில்லை யென்றால் ஆண்டவர் பட்ட பாடுகள் யாவும் வீணாகும். இதுவே திருச்சபை கட்டப்பட்ட விதம்.

சீஷர்களிலுண்டான மாறுதலைக் கவனிப்போம். அவர்கள் கிறிஸ்துவின் சீஷராயிருந்தார்கள். ஆண்டவருடைய வார்த்தைகளைக்கேட்டு அவருக்குக் கீழ்ப்படிந்தார்கள். அவர்கள் ஆண்டவருடைய தோழர்களாயிருந்து அவருக்கு ஆதரவாயிருந்தார்கள். அவர்கள் ஆண்டவருடைய ஊழியக்காரராயிருந்து அவர் கற்பித்தவைகளைச் செய்துவந்தார்கள். இவை யாவும் பெந்தெகொஸ்தே நாளுக்கு முன்னே. இப்போ ஆவியானவர் வந்ததின்பின் அவர்களில் உண்டான மாறுதல் என்ன? முன்னே சீஷர்களாய், தோழராய், ஊழியக்காரராய் அவருக்குப் புறம்பேயிருந்தவர்கள், ஆவியினால் நிறைந்தபின் அவருடைய ஜீவனோடு இணைக்கப்பட்டார்கள். இந்தப் புதிய சம்பந்தம் முன் ஒருபோதும் அவர்களுக்கு இருந்ததில்லை. அவர்கள் எவ்வளவோ ஆண்டவரை நேசித்து, அவரைப் பின் பற்றினபோதிலும், அவர் வேறே தான் அவர்களும் வேறே தான். உலகத்திலே குருவும் சீஷரும் எப்படியோ அது போலவே அவர்கள் காரியமும் இருந்தது. குரு போதிப்பதைச் சீஷன் கேட்பதேயன்றி, எந்தக் குருவும் தன் ஜீவனாலே தன் சீஷனை உயிர்ப்பிக்கமாட்டான். பெந்தெகொஸ்தேக்கு முன் சீஷருடைய நிலைமையும் இதுபோலவேயிருந்தது. ஆவியானவர் வந்தபோதோ அவருடைய சொந்த ஜீவனே அவர்களுக்குள் பிரவேசித்தது. நாங்கள் கிறிஸ்துவுடன்கூடச் சிலுவையில் அறையப்பட்டோம், ஆகிலும் பிழைத்திருக்கிறோம், இனி நாங்கள் அல்ல, கிறிஸ்துவே எங்களுக்குள் பிழைத்திருக்கிறார் என்று சொல்லக்கூடியவராயிருந்தார்கள். அவர்கள் இன்னும் சீஷர்கள் தான். ஆனால் உள்ளான மாறுதலோ அதிசயம். எந்தக் குருவும் தன் சீஷனுக்கு இப்படிச் செய்யமுடியாது. ஆண்டவர் இப்போ புறம்பேயிருந்து போதிக்கிறவராக அல்ல, அவர்களுக்குள்ளிருந்து

போதித்து, தேவ ரகசியங்களை அறியும்படி அவர்கள் மனதின் கண்களைப் பிரகாசிப்பித்தார். இதுவே கிறிஸ்துமார்க்கத்தின் விசேஷம். பெந்தெகொஸ்தின் விசேஷம் இதுவே. அநேகர் நாளது வரை புறம்பே கிறிஸ்துவை வைத்து, அவரிடம் உபதேசம் கற்றுக்கொள்ளுகிறார்கள். பெந்தெகொஸ்தேக்கு முன் சீஷர்கள் நிலைமை எதுவோ அதுவே அவர்கள் நிலைமையும் ஆகும். சீஷர்கள் ஆவியினால் நிறைந்து, தேவ ரகசியங்கள் உள்ளத்தில் வெளிப்பட்டபோது, ஆண்டவரோடிருந்த மூன்று வருஷக்காலம் அறியாத காரியங்களை கொஞ்ச நேரத்துக்குள் அறிந்துகொண்டார்கள்.

அவர்கள் இன்னும் அவர் சிநேகிதர்களே. ஆனால் அவர் பக்கமாய் நிற்கும் சிநேகிதர்களாக அல்ல, ஒரே ஜீவனாலே பிழைக்கும் சிநேகிதரானார்கள். அவர்கள் துக்கம் வேறே, அவர் துக்கம் வேறே அல்ல. அவர்கள் துக்கத்தில் அவர் துக்கப்பட்டார். அவர்கள் சந்தோஷத்தில் அவர் சந்தோஷித்தார். அவர்கள் வெற்றியில் அவர் வெற்றியடைந்தார் சகலமும் பொதுவாகயிருந்தது. ஆச்சரியமான ஐக்கியம்!

அவர்கள் இன்னும் ஊழியர்களே. ஆனால் அவர் கட்டளையிட அவர்கள் போய்ச் செய்கிறவர்களாக அல்ல, அவரே அவர்களுக்குள்ளிருந்து கிரியை நடப்பிக்கும் கருவிகளானார்கள். அவர்கள் கண்கள் கொண்டு அவர் பார்த்தார். அவர்கள் கைகள் கொண்டு அவர் நற்கிரியை செய்தார். அவர்கள் கால்கள் கொண்டு ஆத்துமாக்களைத் தேடினார். அவர்கள் அவருக்குச் சரீரமானார்கள். இதன் உண்மையை அப்போஸ்தலர் நடபடியில் காண்கிறோம். ஐனேயாவே உன் படுக்கையை நீயே போட்டுக்கொள் என்பது பெதஸ்தாக் குளத்தில் தொனித்த ஆண்டவர் சத்தமல்லவா? தபித்தாகூமி என்பது ஆண்டவர் பேதுரு மூலம் பேசினதல்லவா? அப்போஸ்தலருடைய காரியங்களைக் கவனிக்கும்போது கர்த்தரே தமது ஆவியால் அவர்களுக்குள்ளிருந்து தமது வேலையை நடப்பித்தார் என்பது விளங்கும். லூக்கா சொல்லுகிறது இதற்கு ஒத்திருக்கிறது. இயேசுவானவர் எடுத்துக்கொள்ளப்படும் நாள் வரைக்கும் அவர் செய்யவும் உபதேசிக்கவும்

தொடங்கினவைகளைத் தமது சுவிசேஷத்தில் எழுதினார். அவர்
மகிமையடைந்தபின் தாம் தொடங்கின ஊழியத்தை நிறுத்
தாமல், தமது ஆவியால் நிறைந்த அடியாருக்குள்ளிருந்து,
அவர்கள் மூலமாய் நடத்திக்கொண்டு போகிறார் என்பதை
நடபடிப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிறார். இவைகளைக்
கவனிக்கும்போது திருச்சபையின் உத்தரவாதம் நமக்குத்
தெளிவாகிறது. ஆண்டவருக்காக நாம் வேலைசெய்வது திருச்
சபையின் ஒழுங்கல்ல. ஆண்டவரே நமக்குள்ளிருந்து தமக்குச்
சித்தமான பிரகாரம் நம்மை உபயோகிப்பதே பெந்தெ
கொஸ்தின் ரகசியம். 'இந்தியாவின் எதிர்காலச் சபை' என்
பதை நாம் யோசிக்கும்போது நமது கண்கள் பெந்தெ
கொஸ்தை நோக்குகிறது. வேரி (Root)லிருந்து நாம் வளர
வேண்டியதேயன்றி வேறே வழி நமக்கில்லை, இந்த ஜுபிலி
நாளில் ஆண்டவர் நமக்குச் செய்த ஏராளமான நன்மைகளுக்
காக நாம் அவரை ஸ்தோத்திரிப்பதோடு, நம்மை நாமே
ஆராய்ந்து பார்க்கவேண்டிய நாளாகவும் இருக்கிறது. நமது
... ஆலோசனையின்படி நடந்தோம். மாம்சபலத்தில் நம்
பிக்கை வைத்தோம். பரிசுத்தாவிக்குப் பதிலாகப் பணம் அதிக
வேலை செய்திருக்கிறது. நமது முயற்சிகளை, நமது ஏற்பாடு
களை, நாமே செய்த வேலைகளை நாமே மெச்சிக்கொண்டோம்
ஆண்டவர் நமக்குக் காண்பித்த மாதிரியின்படியே அவர் சபை
யைக் கட்டும்படி எச்சரிக்கையாயிருந்தோமா? அக்கினி பரி
சோதிக்கும் நாளில் நமது வேலை நிலை நிற்குமா? நமது ஜீவியம்
எப்படியிருந்தது? பொறாமைக்கும், பெருமைக்கும், கோபத்
துக்கும், வீம்புக்கும் இடங்கொடுத்தோமா? நமது வேலைகளை
மனுஷர் புகழ்ச்சிக்கும், சம்பாத்தியத்துக்கும் அனுகூலமாக
நடத்தினோமா? ஆவியினால் நிறைந்து, கிறிஸ்துவின்
அன்பினால் ஏவப்பட்டு, ஆத்துமாக்கள் ஆசீர்வதிக்கப்பட
வேண்டும் என்றும், பிதாவுக்கு மகிமையுண்டாக வேண்டு
மென்றும், யார் புகழ்ந்தாலும் இகழ்ந்தாலும் கர்த்தருக்கு
ஊழியஞ்செய்து வந்தோமா? பெந்தெகொஸ்தே சபையின்
லட்சணங்கள் நம்மில் உண்டா? நாம் சபையைக் கட்டவோ,
பெருகச் செய்யவோ முடியாது. ஆண்டவரே நமக்குள்
இருந்து தமது சபையைக் கட்டுகிறார். அவர் தமது ஆவியால்

நமக்குள் வசிக்க இடங்கொடுக்கவேண்டும். நமது ஜீவிய வளர்ச்சியோ, ஊழியத்தின் பலனோ நம்மால் ஆகிறதில்லை. 'நீங்கள் என்னிலும் நான் உங்களிலும் நிலைத்திருந்தால் நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பீர்கள்' என்றார். பெந்தெகொஸ்தில் நிறைவேறின காரியம் அதுதான். நாம் அவரிலும் அவர் நம்மிலும் எவ்வளவுக்கு நிலைத்திருக்கிறோமோ அவ்வளவுக்கு நமது ஜீவியமும் ஊழியமும் ஆசீர்வதிக்கப்படும். தேவாவியானவர் நம்மை நிரப்புவாராக. அப்போது வருங்காலத்துச் சபை எப்படியிருக்கவேண்டுமென்பது தானாகவே விளங்கும்.

நற்செய்திச் செல்வராகத் திகழ்ந்த திருமதி ராஜம்மாள் டிக்கிகஸ் அவர்கள் வேலூரிலுள்ள ஆற்காடு இறையியல் கல்லூரியில் தம் கணவர் அருள்திரு. எபநேசர் டிக்கிகஸ் அவர்களோடு சேர்ந்து முப்பதாண்டுகளுக்கும் மேலாகத் திருப்பணி ஆற்றியதோடு திருச்சபையில் பெண்கள் ஐக்கிய சங்கம், கிறிஸ்தவப் பக்தி முயற்சி சங்கம் ஆகியவற்றிலும் பொறுப்புள்ள ஊழியம் செய்துள்ளார்கள். ஓய்வுபெற்ற பின்பும் ஜெப ஊழியத்தில் தம்முடைய 79ஆவது வயது வரை ஈடுபட்டிருந்தார்கள்.

சிறுவர்களின் பக்தி வளர்ச்சிக்கென்று அவர்கள் எழுதிய 25 எடுத்துக்காட்டுக் கதைகளைக் கொண்ட சிறுவர்களே உங்களுக்கு . . . மற்றும் பலஸ்தீனா என்னும் புனித நாடு ஆகிய நூல்களைத் தொடர்ந்து இந்நூல் வெளிவருகின்றது. அவர்களின் 85ஆம் ஆண்டு நிறைவினை ஒட்டி வெளிவரும் நூல் இது.

CLS

APPOSTHALAR NADAPADIGAL

by RAJAMMAL TYCHICUS

விலை ரூ. 25·00 (இந்தியாவில் மட்டும்)